இரவி

கலை இலக்கிய காலாண்டுக் கதிர்

தை ~ பங்குனி 2025 கதிர் ~ 3 வெளியீடு: இரவி சஞ்சிகை இலங்கை

பாத்திரமாகவே மாறி மேடை நாடகக் கலையை அடுத்த நிலைக்கு கொண்டுசென்ற நாடகர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்

மதிப்பளிப்பு



திறனாய்வுப் போட்டி

கனாடாவில் வசித்துவரும் தமிழ் இலக்கிய உலகில் ஆழமாக தனது தடங்களை பதித்து சிறந்த ஆளுமையாக வலம்வரும் எழுத்தாளர் பன்முக ஆளுமை குரு அரவிந்தன் அவர்களின் வாசகர் வட்டம் வருடாந்தம் நடாத்துகின்ற திறனாய்வுப் போட்டி இம்முறையும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனைப்பற்றிய விபரங்கள் கீழே உள்ள விளம்பரத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. எழுத்தாளர்களே.. திறனாய்வாளர்களே நீங்களும் உங்கள் திறண்களை வெளிப்படுத்தி பரிசுகளை வெல்லுங்கள். பங்குபற்றும் இரவி சஞ்சிகையின் எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களை வெற்றிபெற வாழ்த்துகிறோம்

இங்ஙனம்

பிரதம ஆசிரியர்

இரவி மின் இதழ்

திறனாய்வுப் போட்டி - வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்

எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும்

உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி - 2025

தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் - 30,000.

இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 25,000.

மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.

நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.

ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 10,000.

10 பாராட்டுப்பரிசுகள் இலங்கை ரூபா தலா - 5000.

குரு அரவிந்தனின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது **2 புதினங்கள்** அல்லது **4 சிறுகதைகள்** பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவர்களாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாகவெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும். உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய **கடைசி நாள்: 31. 03. 2025**

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: : kurufanclub@gmail.com

இணையம்: : https://kurunovelstory.blogspot.com/, http://tamilaram.blogspot.com/

https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை நண்பர்களுடன் பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com

இரவி

கலை இலக்கிய
காலாண்டு இதழ்

பிரதம ஆசிரியர்: நரேஸ் நியூட்டன்

கதிர் 03

தை - பங்குனி 2025

உங்கள் படைப்புகளை அனுப்ப:

iravi.magazine@gmail.com

உதவி ஆசிரியர்: அரவிந்தன்

இந்த இதழில் வெளியிடப்படும் சகல ஆக்கங்களுக்கும் அதனை எழுதியவர்களே பொறுப்புடையவர்களாவர் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

சகல ஆக்கங்களும் பாமினி யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டு மென் பிரதியாக மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். தங்கள் பெயர் முகவரி மற்றும் புகைப்படம் ஆக்கத்துடன் அனுப்பி வையுங்கள்

புதுக்கவிதை

மரபுக் கவிதை

கட்டுரைகள்

சிறுகதைகள்

தொடர் கதைகள்

நேர் காணல்கள்

நூல் அறிமுகம்

நூல் ஆய்வு

சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கமான விடையங்கள்

ஓவியங்கள் போன்றவை வரவேற்கப்படுகின்றன. எழுதி எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

மூன்றாவது இதழை தங்கள் படைப்புகளால் அலங்கரித்த ஆளுமைகள்



இரவி

மூன்றாவது கதிரின் உள்ளே....

கதிர் வீச்சு

கட்டுரை

- நாடக அரங்கக்கலையில் நவீனத்துவத்தை உட்புகுத்திய நாடகர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்
- குரு அரவிந்தனின் தமிழ்ச்சிறுகதைகள்
- மொழியை விருத்தி செய்யுங்கள்
- ஈழத்தில் வெளிவந்த தமிழ்த்திரைப்படங்கள் ஒரு தேடல்
- ஈழத்தின் தமிழ்த்திரைப்படங்கள் வர்த்தக ரீதியில் வெற்றிபெறாமை ஏன்?
- நிலாவில் ஒரு நீலப்பிசாசு
- படித்ததில் பிடித்தது

சிறுகதை

- ஏற்காட்டில் ஒரு சதி
- மடை திறந்த மௌனம்
- ஆசையில் ஓர் கடிதம்

பத்தி

- கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் விருது விழா
- வதனம் மஞ்சரி—கனடா சிறப்பிதழ் வெளியீடு
- சென்னை புத்தக கண்காட்சி

கவிதைகள்

- வாடகைவீடும் வலிக்கும் நினைவும்
- வியாபாரம் செய்யினமாம்
- குடையுடன் துலாவிநின்ற குவலயத்து பொங்கல் இன்று....
- யுகங்களெல்லாம்
- காதல் இனிமையே
- மூன்று
- காதல் பாவையாய்
- காதலின் விதியில்
- காதல் கல்யாணம்
- ஓவியத் தாயும் ஒரு துளி நீரும்

தொடர் நவீனம்

- கரிசல் மண்ணில் ஒரு காவியம்

நிகழ்வுகள்

துளிப்பாக்கள்

இரவி

கதிர் வீச்சு....1

உலகம் முழுவதும் பரந்து வாழும் எம் தமிழ் உறவுகளுக்கும் தமிழை நேசிக்கும் ஏனைய அனைத்து உறவுகளுக்கும் எனது அன்பு வணக்கம்!

இரவி *சஞ்சிகையின் முன்னய இதழ்கள் சிறப்பாக வெளிவந்து பல வாசகர்களுனதும் ஆளுமைகளினதும் பாராட்டுதல்கள் கிடைத்ததோடு அவர்களது ஆதரவும் கிடைத்தமை எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியை வழங்குகிறது. எமது முன்னைய இதழ்களுக்கு கிடைத்த வரவேற்பிற்கும் சிறந்த பின்னூட்டங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இதே போல் தொடர்ந்து வரும் இதழ்களுக்கும் தங்கள் அனைவரதும் ஆசிகளையும் ஆதரவையும் வழங்குவீர்கள் என்ற அளவிலலாத நம்பிக்கையுடன் எனது பயணத்தை தொடர்கிறோம்.ஒவ்வொரு இதழகளையும் வெளியிடுவதில் ஒவ்வொருவகையான தடைகளும் இடையூறுகளும் ஏற்படத்தான் செய்கிறது. அவற்றையெல்லாம் தாண்டி எமது வெளியீட்டை தொடர்கிறோம். நாம் முகம்கொடுக்கும் ஒவ்வொரு இடையூறுகளும் ஒவ்வொரு அனுபவங்களாக கற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருப்பது ஒரு வகையில் மகிழ்ச்சியே.*

முன்னைய இதழ்களின் வெளியீட்டில் எமக்கு பக்கபலமாக இருந்து உதவி புரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு கடந்த இதழிற்கு தங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், திரைக்கதை, பத்தியாக்கம், நகைச்சுவைத்துணுக்கு போன்ற பல்வேறு படைப்புகளை அனுப்பிய அனைத்து எழுத்தாளர் மற்றும் கவிஞர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். அவர்கள் இன்றி சஞ்சிகை இல்லை. இதேபோலவே எம்மோடு இணைந்திருக்கும் அனைத்து எழுத்தாளர்களும் தொடர்ந்து எம்முடன் இணைந்திருந்து தங்கள் படைப்புகளையும் மேலான ஆலோசனைகளையும் பின்னூட்டங்களையும் வழங்குவதன் மூலம் எமது அடுத்த கட்ட எதிர்பார்ப்புகள் இலக்குகள் அனைத்தையும் அடைவதற்கு உதவியாகவிருப்பீர்கள் என்பதை உறுதியாக தெரிவிக்கிறோம். நீங்கள் இல்லாமல் தாய் மொழி வளர்ச்சி சார்பான எந்த ஒரு முயற்சியும் கைகூடாது என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே நீங்களே எங்கள் பலம் என்பதை உள்ளார்ந்தமாக அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம்.

நாளுக்கு நாள் எம்மோடு புதிய ஆளுமைகள் தொடர்ச்சியாக இணைந்துவருகிறார்கள். அவர்களது படைப்புகளும் இரவி இதழை அலங்கரிக்கத்தவறவில்லை. எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் இதழுக்கான பங்களிப்பில் ஊக்குவிப்பதோடு அவர்களது திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான பணிகளையும் நாம் வெவ்வேறு வழிகளில் முயன்று நடைமுறைப்படுத்தி வருகின்றோம். மேலும் பல புதிய முயற்சிகளில் இறங்குவதற்கும் முன்னேற்பாடுகளை மேற்கொண்டுவருகிறோம். இதழில் வெளிவரும் ஆக்கங்கள் தவிர்ந்த இதழ் சார்பான ஏனைய அனைத்து செயற்பாடுகளும் எமது இதயபூர்வமான பங்களிப்போடு வேறு யாருடைய நிதிப்பங்களிப்புமின்றியே மேற்கொள்கிறோம். கணணி தட்டச்சு, பக்க வடிவமைப்பு, ஓவியங்கள், புகைப்படங்கள், வரைபுகள் வரைதல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் இவ்வாறே மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றை மேற்கொள்பவர்களுக்கு எந்தவிதமான கொடுப்பனவுகளும் இதுவரை வழங்கப்படவில்லை. இப்படித்தான் எமது சஞ்சிகை அமைதியாக வளர்ச்சியடைந்து ஒவ்வொரு இதழ்களாக வெளிவந்துகொண்டிருக்கிறது. அது எமக்கு பெருமையும் மகிழ்ச்சியும்தான். நீங்கள் ஒவ்வொருவரும் படைப்புகள், மற்றும் பாராட்டுகள் மூலம் வழங்கும் ஆதரவும் ஒத்தாசையுமே எம்மை தொடந்து இதே ஆர்வத்தோடு பயணிக்க ஊக்குவிக்கிறது எதிர்காலத்திலும் ஊக்குவிக்கும் என்பதை தங்களுக்கு மகிழ்ச்சியோடு அறியத்தருகிறோம்.

இந்த இதழில் பல்வேறு புதிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. ஈழத்தின் தமிழ் சினிமா சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய படைப்பாக கடந்த படைப்பு வெளிவந்திருந்தது. அதில் வெளிவந்த ஈழத்து தமிழ் சினிமா வெளியீடுகள் பற்றிய கட்டுரை இந்த இதழிலும் தொடர்கிறது அக்கட்டுரை எமது அடுத்தடுத்த இதழ்களிலும் தொடரும். இந்த இதழில் வழக்கமாக இடம் பெறும் சொல்லாமலே ஒரு

*சந்திப்பு என்ற பக்கத்திற்கு பதிலாக **நாடகர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்** அவர்களைப் பற்றிய கட்டுரை இடம்பெறுகிறது. சொல்லாமலே ஒரு சந்திப்பு அடுத்த இதழில் தொடர்ந்து வெளிவரும். நாடகரின் கட்டுரை வெளிவருவதன் அவசியம் கருதி இந்த மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.*

*இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழின் வளர்ச்சியில் நீண்ட காலமாக தங்கள் பங்களிப்பை வழங்கி தமிழ் இலக்கிய வளர்ச்சித்துறையில் ஆழமாக தங்கள் தடங்களை பதிவு செய்த ஆளுமைகள் சிலருடைய மிகக் குறுகிய காலப்பகுதிக்குள்ளான அடுத்தடுத்த இழப்புகள் ஈடுசெய்ய முடியாதவை. மேடை நாடக அரங்கக் கலையில் மிகப்பெரும் மாற்றத்தையே உண்டாக்கி ஈழத்து நாடகங்களை உலகறியச் செய்த பேராளுமை, **மண்சுமந்த மேனியர்** என்ற நாடகத்தின் மூலம் உலகளாவிய மக்கள் மனங்களை தொட்டவர் **நாடகர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்** அவர்களின் இழப்பு. அடுத்து பிரபல எழுத்தாளரும் ஊடகத்துறையில் செய்தியாளராக செய்தி வாசிப்பவராக, விமர்சகராக ஆழமாக காலூன்றி உலகத் தமிழ் மக்களின் உள்ளங்களை கொள்ளைகொண்ட, இலண்டன் பி.பி.சி. தமிழ் ஓசை நிகழ்ச்சியின் முதற் பெண் இயக்குநராக நீண்டகாலமாக செயற்பட்டு வந்த தமிழோசை ஆனந்தி என்று உலகம் போற்றிய **திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம்** அவர்களின் மறைவு.*

*அடுத்து ஒரு இழப்பாக பதிவாகியது நீண்டகாலமாக ஊடகத்துறையில் கோலோச்சி சாதனைகள் பல புரிந்த மற்றொரு ஈழத்து ஊடகவியலாளர், ஞாயிறு தினக்குரல், தினக்குரல் இணையப்பத்திரிகை, ஆகியவற்றின் முன்நாள் ஆசிரியரும் வீரகேசரி வடபிராந்தியப் பதிப்பின் ஆசிரியருமான மூத்த பத்திரிகையாளர் **இராசநாயகம் பாரதி** அவர்களின் இழப்பு. இவருடைய இழப்பும் தமிழ் ஊடகத்துறையில் மற்றொரு அனுபவம் சார் ஆழுமை ஒருவரின் இழப்பாகவே அமைந்துவிட்டது. குறுகிய கால இடைவெளிக்குள் ஏற்பட்ட ஆளுமைகளின் இழப்புகளுள் மற்றொருவர் மலையகத்தின் மிகவும் பிரபலமான அதே வேளை முக்கியத்துவம் மிக்க ஆளுமைகளுள் ஒருவரும் இதழியல் நாடகத் துறைகளில் பாரிய அளவில் பங்காற்றி வந்தவருமான மூத்த அனுபவமிக்க தமிழ் இலக்கித்துறையில் அதிக பங்களிப்புச்செய்த ஆளுமை, இவர் மலையக எழுத்தாக்கங்களை பதிப்பிக்கும் முயற்சியில் அதிக ஆர்வம் காட்டியவரும் கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவருமாகிய **அந்தனி ஜீவா** அவர்கள். அடுத்து ஈழத்து இலக்கியப் பரப்பில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக சிறுகதை, நாவல், குறுநாவல், குறுங்கதைகள் மற்றும் கட்டுரைகள் போன்றவற்றை படைத்து பல தளங்களுக்கூடாகவும் தனது இலக்கியப் பங்களிப்பை செவ்வனே வெளிப்படுத்தி வந்த பேராளுமை **கே. ஆர். டேவிட்** அவர்களின் மறைவு என்று பலரது மறைவுச் செய்திகள் பதிவாகியது..*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தொய்வத்துள் வைக்கப் படும்

*என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கொப்ப வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தின் பாதடிகள் தேடி இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு விடைபெற்ற இந்த ஆளுமைகள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் அவர்களது முத்தமிழ் இலக்கியத் துறைக்காற்றிய பங்களிப்புகளுக்கூடாக இவ்வையகம் இருக்குங்கால் வாழ்ந்துகொண்டே இருப்பார்கள்என்பதை உறுதிபட தெரிவிக்கிறோம். இவர்களின் பிரிவுத் துயரில் **இரவி** சஞ்சிகைக் குழுமமும் பங்குகொள்வதோடு பிரிவுத் துயரில் வருந்துகின்ற அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.*

எமது சஞ்சிகையின் தொடர்ச்சியான வளர்ச்சி சஞ்சிகை எத்தனை வாசகர்களையும் படைப்பாளர்களையும் சென்றடைகிறது என்பதிலேயே தங்கியிருக்கிறது. ஆகவே இதனை அனைத்து தமிழ் பேசும் மக்களிடமும் கொண்டு சேர்க்கும் பொறுப்பை சஞ்சிகை மின் இதழாக கையில் கிடைக்கும் ஒவ்வொருவரிடமுமே விட்டுவிடுகிறோம். உங்கள் மீது நாம் வைத்துள்ள அபார நம்பிக்கையே எமது பலம் என்று உங்களுக்கு தெரியப்படுத்துவதோடு நிறைவு செய்கிறேன்.

இவ்வண்ணம்

பிரதம ஆசிரியர்

நரேஸ்

நாடக அரங்கக்கலையில் நவீனத்துவத்தை உட்புகுத்திய நாடகர் கலாநிதி குழந்தை ம. சண்முலிங்கம்

என்றும் அழியாத நல்ல நாமத்தோடும் புகழோடும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருந்கக் கூடியவர்கள் கலை இலக்கியத்தினூடக தமது ஆற்றல்களை எப்போதும் புதிய பரிணாமங்களுடன் வெளிப்படுத்தி வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர்களே என் றால் அது மிகையாகாது.

கலை இலக்கித்துறையில் சாதனைகள் புரிந்து மக்களால் போற்றப்பட்டு வந்த சில ஆளுமைகளின் இழப்பு செய்தி அண்மைக்காலத்தில் அடுத்தடுத்து வந்து கலை இலக்கிய ஆர்வலர்களை கலக்கமடையச் செய்திருக்கிறது. அந்த வகையில் வந்த செய்திகளுக்குள் ஒன்றுதான் நாடகர் என அநேகரால் போற்றப்படும் சர்வதேச மட்டத்தில் நாடக அரங்கக் கலையால் தனது பெயரை வலம்வரும்படியாக நாடகக்கலையில் பல சாதனைகளைப் புரிந்த மதிப்புக்குரிய கலைஞர் நாடகர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் மறைவுச்செய்தி.

யார் இந்த நாடகர்? இதை நான் சொல்வதால்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை காரணம் ஈழத் தமிழ் மக்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் நன்கு பரீட்சையமாகிவர் இவர். சர்வதேசமட்டத்தில் அநேகமான தமிழ் மக்களின் மனதில் ஆழமாக பதிந்த மனிதர்தான் இவர். **மண் சுமந்த மேனியர்** என்ற மேடை நாடகத்தின் மூலம் மிகப்பெரிய ஆர்வத்தை நாடகக் கலைஞர்களிடத்தில் உருவாக்கியவர் என்பது மட்டுமல்ல மேடை நாடக கலையிலும் நவீனத்துவம் மிக்க மாற்றத்தை உருவாக்கியவர்.

அரங்க ஆற்றுகை திறன் மேம்பாட்டின்பொருட்டு மேலும் சில ஆளுமைகளின் ஒத்தாசையோடு அவர்களது ஈடுபாட்டுடன் மற்றொரு நாடகக் கலைஞரான தார்சீசியஸ் அவர்களுடன் இணைந்து 1978 தை 23ஆம் திகதி நாடக அரங்கக்கல்லூரியை ஆரம்பித்தார். இவர்களுடன் நாடக கலைஞர் வி. எம் குகராஜா போன்ற மேலும் சிலரும் அப்போது இணைந்து செயற்பட்டமையும் வி. எம். குகராஜாவை ஆசிரியராகக்கொண்டு நாடக அரங்கக் கல்லூரியின் ஒரு வெளியீடாக **அரங்கம்** என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. நாடக அரங்கக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு சில காலங்கள் கடந்த நிலையில், 1982 என்று நினைக்கிறேன் அவரை நான் முதன் முதலில் சந்தித்தித்தேன். அப்போது எனக்கு அதிக தூரம் பயணிப்பது சிரமம் என்பதாலும் வயதும் அவர்களோடு ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக இருந்தமை காரணமாக ஆரம்பத்தில் ஒரு சில சந்திப்புகளோடு தொடர்பு நின்றுபோக மீண்டும் **மண் சுமந்த மேனியர்** நாடகத்தை பார்பதற்காக சென்ற சந்தர்ப்பத்தில் சந்தித்திருக்கிறேன். தொடர்ந்து அவருடன் இணைந்து பயணிக்கவேண்டும் என்ற எனது ஆர்வம் நாட்டில் இருந்த சூழ்நிலைகளால் கைகூடவில்லை. பின்னர் எப்போதாவது நீண்ட இடைவெளிகளுக்கு இடையில் சந்திக்கும்போது முகமலர்ச்சியோடு கை கொடுத்துவிட்டு திரும்புவது என்ற நிலைமைதான் இருந்தது.

மண்சுமந்த மேனியர் நாடகத்திலிருந்து ஒரு காட்சி

இவர் 1950ஆம் ஆண்டில் அரங்கக்கலைக்குள் குறிப்பாக மேடை நாடகக்கலைக்குள் நுளைந்தவர். யாழ் திரு-நெல்வேலி இந்து இளைஞர் சங்கத்தினால் மேடையேற்றப்பட்ட நாடகமொன்றில் முதியவராக வேடம்தரித்து தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியமையிலிருந்து இவரது நாடகக்கலைப்பயணம் ஆரம்பிக்கிறது என்று அறியக்கிடைக்கிறது. அப்போதெல்லாம் நான் பிறந்திருக்கக்கூட இல்லை. இவர் இந்த துறைக்குள் நுளைந்த 1950ஆம் ஆண்டு முதல் இறுதிவரை இவர் நாடகத்துறையின் வளர்ச்சி, நவீனத்துவம், மாற்றம் போன்றவற்றில் ஆற்றிய பணிகள் சொல்லியடங்காதவை. அவரது அயராத முயற்சியில் வெற்றியும் பெற்றார் என்றே சொல்லவேண்டும்.

நாடக அரங்கக் கலை ஆளுமைகளுடன் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்

மேடை நாடகவளர்ச்சியில் இவர் தனதாக்கிக்கொண்ட பாத்திரங்கள் பல. அவரது பயணம் நாடக நடிகராக ஆரம்பித்தாலும் பின்னர் நெறியாளராக, நாடகாசிரியராக, தயாரிப்பாளராக, நாடக களப் பயிற்றுவிப்பாளராக, நாடக வரலாற்று ஆசிரியராக, விமர்சகராக, திறனாய்வாளராக, நாடக அரங்கக் கல்லூரியை ஆரம்பித்ததன் மூலம் கற்கை நிறுவனம் ஒன்றுன் நிறுவுநராக, விமர்சனைங்களை நடுநிலையாக மேற்கொண்டதன் மூலம் சிறந்த விமர்சகராக என்று நாடக அரங்கக்கலையுடன் தொடர்புபட்ட பல்வேறு முகங்களுடன் பயணித்தவர். அது மட்டுமல்லாது யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் வருகை தரும் விரிவுரையாளராக கடமையாற்றியதன் மூலம் அரங்கக்கலைப் போதனாசிரியராகவும் செயற்பட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் போதனாசிரியராக கடமையாற்றிய காலத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட ஒரு சிறிய முரண்பாடு காரணமாக சுயமரியாதையை இழந்துவிடக்கூடாது என்ற ஒரே காரணத்துக்காக அதனையும் கைவிட்டு ஒதுங்கியதாக அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்ற இவர் சார்பான நினைவேந்தல் நிகழ்வொன்றில் அனுபவப் பகிர்வை மேற்கொண்ட பேராசிரியர் மௌனகுரு அவர்கள் குறிப்பிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் மௌனகுரு அவர்கள் இவருக்கு இளையவராக (இருவருக்குமிடையில் 12 வயது வித்தியாசம்) அரங்கக்கலை செயற்பாடுகளுடன் ஈடுபடுபவர் என்பதும் நாம் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டியதே. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் கலாநிதி ம. சண்முகலிங்கம் அவர்களும் பேராசிரியர் மௌனகுரு அவர்களும் இணைந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற பல மாவட்டங்களின் வெவ்வேறு பிரதேசங்களுக்கு சென்று கள நா-டகப்பயிற்சிகளை வழங்கி மேடை நாடகக் கலையை ஊக்குவிப்பதற்கான பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவரது மேடைநாடக கலை வளர்ச்சிப்பயணத்தில் அருமை நண்பன் 1958 ஆம் ஆண்டிலும், வையத்துள் தெய்வம் (இந்த நாடகம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உலகத்தமிழாராட்சி மாநாட்டில் முதன் முதலில் மேடையேற்றப்பட்டதாகவும் அறியக்கிடைக்கிறது அப்படியாயின் இது 1956இல் ஆக இருக்கவேண்டும்) 1961ஆம் ஆண்டிலும், கூடி விளையாடு பாப்பா (1978 சிறுவர் நாடகம்), நெடும் பயணம் 1979ஆம் ஆண்டிலும் 1980களில் உறவுகள், நாளை மறுதினம், மாதொருபாகன், தாயுமாய் நாயுமானார், திக் விஜயம், நரகத்தில் இடர்படோம், சத்திய சோதனை, தியாகத் திருமணம், பஞ்சவர்ண நரியார், போன்ற சிறுவர் நாடகங்களும் இவரால் எழுதப்பட்ட நா-டகங்களாகும். இதைப்போல் உறவுகள் என்ற நாடகம் 1982இலும் மண்சுமந்த மேனியர் முதற் பாகம் 1985இலும் வெளிவந்தன.

நாடக அரங்கக் கலைஞர்களுடன் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்

இதில் மண்சுமந்த மேனியர் பாகம் ஒன்று இவரது கலையாற்றலை உலகிற்கே வெளிப்படுத்திய சிறந்த படைப்பாக வெளிப்பட்டதோடு அநேகமான மக்களின் மனதையும் ஆழமாக ஊடுருவியது என்றால் அது மிகையாகாது. மண்சுமந்த மேனியர் நாடகம் யாழ்பாணப் பல்கலைக்கழக கலசாரக்குழுவிற்காக எழுதி தயாரிக்கப்பட்டது. இந்த நாடகம் பல மேடைகளை கண்டது. இந்த நாடகத்தில் அவர் பல்வேறு புதிய நுணுக்கங்களை அறிமுகப்படுத்தயிருந்தார். இதில் பிரபலமான ஒரு மேலைத்தேச நாடகாசிரியரின் நாடகக்கலை நுட்பம் ஆய்ந்தறியப்பட்டு அவையும் இதில் புகத்தப்பட்டதாகவும் சில கருத்துகள் உண்டு. இவர் இதற்காக பயன்படுத்திய நவீனத்துவ நுட்பம் **பிறெஸ்ரிலியன்** வடிவம் என குறிப்பிடப்படுகிறது. இயல்பான நடிப்பு, சாதாரண மக்களின் வாழ்க்கைமுறை, நாடகத்திற்குள் இசையுடன் கலந்த பாடல்கள், அவ்வப்போது பின்புலத்திலிருந்து சமூகத்தின் உண்மை மனநிலைகளை வெளிகொணர்வதான குரல் மூலமான வெளிப்படுத்துகை, நாடகத்தை மேடையிலன்றி பார்வையாளர்களுக்கு மத்தியிலிருந்தே ஆரம்பித்தல் போன்ற பல்வேறு புதிய நுணுக்கங்கள் புகத்தப்பட்டு பிரமிப்புகள் வெளிகொணரப்பட்டிருந்தது.

அப்போது நாட்டில் இன முரண்பாடுகள் மிகவும் உச்ச நிலையடைந்திருந்தது. அதேவேளை இனவிடுதலையை முன்நிறுத்தி பல விடுதலைப் போராட்ட அமைப்புகள் உருவாகி செயற்பட்டுக்கொண்டிருந்ததோடு அவர்களுக்குள் போட்டியும் முரண்பாட்டுடனான முறுகல் நிலைகளும் அவ்வப்போது தலைகாட்டிக்கொணண்டிருந்த தருணம். அந்த சூழலை மனதில்கொண்டு ஈழ விடுதலைப் போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்த போராட்ட களத்தின் சூழ்நிலையை ஆழமாக மனதில்கொண்டு ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதாக வெளிவந்ததே இந்த நாடகம். முதல் பாகம் விடுதலையுணர்வை விதைப்பதோடு மக்கள் ஒற்றுமையை வெளிக்கொணர்வதாகவும் இரண்டாம் பாகம் விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்குள் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்திருந்தது. இதில் நேரடியாக அந்த விடயம் குறிப்பிடப்படாவிட்டாலும் நாடகத்தை சிறப்பாக விளங்கிக் கொண்டவர்களால் தெளிவாக விளங்கிக்கொள்ளப்பட்டது.

பாஞ்சாலி சபதம் (1989), எந்தையும் தாயும், மண்சுமந்த மேனியர் பாகம் இரண்டு (1987ஆக இருக்கவேண்டும்), அன்னையிட்ட தீ (1991), உள்ளக் கமலமடி (1992), ஆரோடு நோகேன் (1993), நீ செய்த நாடகமே (1994), இடுக்கண் வருங்கால் (1998 சிறுவர் நாடகம்) யார்க்கெடுத்துரைப்பேன், புழுவாய் மரமாகி, எங்கள் தவப்பயன், நாளை மறுதினம், திரிசங்கு சொர்க்கம், வேள்வித் தீ, பள்ளியெழுந்திடுவீர், மனத்தவம், ஆர்கொலோசதுரர், நரகோடு சுவர்க்கம், வாற்பேத்தை, புகலிடம் பிறிதொன்றுமில்லை, நேயத்தே நின்ற நிமலன், எங்கள் தவப்பயன் போன்றவையும் இவரது நாடகங்களாகும். இவ்வாறு இவர் எழுதிய நாடகங்கள் 150ற்கும் அதிகம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் மண்சுமந்த மேனியர் பாகம் இரண்டு முதலாவது பாகத்தைப்போன்று பெரியளவிலான வரவேற்பைப்பெறவில்லை என்பது குறிப்பிடப்படக்கூடியது.

அன்னை இட்ட தீ நாடகத்திலிருந்து ஒரு காட்சி

அன்னை இட்ட தீ என்ற நாடகம் தாயகத்தில் இடம்பெற்ற போரினால் ஏற்பட்ட வடுக்களை களத்திலே இருந்து பார்த்த அனுபவங்களை அடிப்படையாக வைத்து அவற்றை நாடகக் கலை மூலமாக வெளிக்கொணரும் நோக்கோடு தயாரித்து நெறிப்படுத்தி அரங்கேற்றினார். அதே போலவே **யார்க்கெடுத்துரைப்பேன்** என்ற நாடகம் போரின் காரணமாக இடம்பெயர்ந்து ஏதிலியர் முகாம்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலைமைகளையும் அவர்களது அவலங்களையும் அப்படியே தத்துபமாக வெளிக்கொணரும்பொருட்டு எழுதி, தயாரித்து, நெறிப்படுத்தி அரங்கேற்றினார். **எந்தையும் தாயும்** என்ற நாடகம் யுத்ததினால் மேலைத் தேசங்களுக்கு புலம் பெயர்ந்து சென்ற பிள்ளைகளும் அவர்களின் தூரதேச வாழ்க்கையால் பெற்றோர்கள் படும் அவலங்கள் அவஸ்தைகளையும் தத்ரூபமாக வெளிக்கொணரும் நாடகமாக அரங்கேற்றம் கண்டது.

இவற்றுக்கப்பால் அவர் வேற்று மொழி நாடகங்களின் மொழி மாற்றத்திலும் ஈடுபட்டார். அதன் பயனாக கிடைத்தவையே தாகூரின் துறவி, நோவே ஒரு பவை வீடு, இடிபஸ் மன்னன் போன்ற மொழி மாற்ற நாடகங்களாகும்.

இவர் எழுதிய நாடகங்களுள் கண்மணிக் குட்டியார், கண்டறியாத கதை போன்ற சிறுவர் கதைகள் 2005இல்

எந்தையும் தாயும் நாடகத்திலிருந்து ஒரு காட்சி

வெளிவந்தவை. அதேபோல் நட்பு, ஆச்சி சுட்ட வடை, கூடிவாழ்வோம், குழந்தைகள் பாவனை செய்யும், அன்னத்தடாகம், வேட்டைக்காரன், குளத்து மீன்கள், செல்லும் செல்லாத செட்டியார், சிலையின் சீற்றம், ஒற்றுமையின் சின்னம், ஒரு பூனையின் விலை என்ன?, முயலார் முயல்கிறார், பண்பும் பயனும், காட்டு இராஜா சிங்கம், பாலுக்கு பாலகன், தாய் சொல்லைத் தட்டாதே, அன்னையும் பிதாவும், மந்திரத்தால் மழை, அயலவன் யார்? பந்தயக் குதிரை போன்ற சிறுவர் நாடகங்களும் இவரால் எழுதப்பட்ட சிறுவர் நாடகங்களுள் குறிப்பிடக்கூடிய சில நாடகங்களாகும்.

ஆரொடு நோகேன் நாடகத்திலிருந்து ஒரு காட்சி. ஸ்ரீ சோமஸ்கந்தா ஆசிரியர்களும் மாணவர்களும்

இவருடைய அரங்க கலைப்படைப்புகள் சில மக்களின் உளவியல் ரீதியிலான பாதிப்புகளை சரியான முறையில் அடையாளம் கண்டு அந்தப்பாதிப்புகளை தத்ரூபமாக வெளிக்கொணர்வதாய் அமைந்தன. மிக முக்கியமாக

போர்ச்சூழலால் ஏற்பட்ட பாதிப்புகளின் மூலம் உருவாகியிருக்கக் கூடிய உள ரீதியான பாதிப்புகள் மிகத் தெளிவாக உணரப்பட்டு சில நாடகங்களின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அந்த நாடகங்களில் குறித்துரைக்கக்கூடியனவாக எந்தையும் தாயும், அன்னை இட்ட தீ போன்ற நாடகங்களை குறிப்பிடலாம். உளவியல் ரீதியான பாதிப்புகளை அடையாளம் காணும்பொருட்டு இவர் பல தேடுதல்களிலும் ஆய்வுகளிலும் ஈடுபட்டிந்தருந்தார். அந்த ஆய்வுகளினதும் தேடுதல்களினதும் பெறுபேறுகள் இந்த நாடகங்களில் அடையாளப்படுத்திக் காண்பிக்கப்பட்டன. உளவியல் ரீதியிலான பாதிப்புகள் பற்றிய இவரது தேடுதல்களை இவர் தனித்து மேற்கொள்ளாமல் அதனுடன் தொடர்புடையவர்களின் ஆலோசனைகள் பங்களிப்புகளுடன் ஒரு கூட்டு முயற்சியாகவே இந்த நாடகங்களை தயாரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரோடு சிவயோகன் அவர்களும் உளவியல் ரீதியான படைப்புகள் சிலவற்றில் துணையாக செயல்பட்டார் என அறியமுடிகிறது.

நாடக அரங்க ஆளுமைகளுடன் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்

சமூக உளவியல் மற்றும் உளம் சார் மருத்துவ ரீதியான அடையாளம் காணல் மற்றும் ஆற்றுப்படுத்துகை போன்ற விடயங்களில் இவருக்கு கூடுதல் ஆதரவையும் ஆலோசனைகளையும் வழங்கி பக்கபலமாக இருந்தவர்கள் அருட் தந்தை எஸ். டேமியன், வைத்திய கலாநிதி டீ. ஜே. சோமசுந்தரம், அருட்தந்தை சா. ம. செல்வரத்தினம் வைத்திய கலாநிதி இ. சிவசங்கர் போன்றோரேயாவர். இவர்கள் தவிர்த்து உளவியல் ஆற்றுப்படுத்துகை செயற்பாட்டுடன் தொடர்புடைய நிபுணத்துவம் வாய்ந்த வேறு சிலரின் உதவி மற்றும் ஆலோசனைகளையும் பெற்றிருந்தார். இந்த உளவியல் சார்ந்த நாடகங்கள் உளவியல் செயற்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஆற்றுப்படுத்துகை செயற்பாட்டுக்கு இணையாக ஆற்றுப்படுத்துகையில் முக்கிய பங்கை வகிக்கும் வகையில் உருவாக்கம் பெற்றிருந்தமையும் அதே நோக்கில் மக்களின் அமோக ஆதரவை பெற்றிருந்தமையும் சிறப்பாக கருதமுடியும். அதுமட்டுமற்றி உள ஆற்றுப்படுத்துகை செயற்பாடுகளை நாடகம் மூலம் மருத்துவ ரீதியான சிறந்த பெறுபேறுகளை பெறும் வகையில் உருவாக்கிய ஈழத்தவர் குழந்தை ம. சண்முகலிங்கம் என்பது என்றும் கவனத்தில் கொள்ளவேண்டியது. இதே நடைமுறையை மருத்துவ ரீதியிலான ஆற்றுப்படுத்துகையின் பொருட்டு பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த ஆட்டாவூட் மற்றும் இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த அகஸ்தாபோல் போன்றவர்கள் இவருக்கு முன்னரே பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் சிறுவர்களுக்கான அதிக நாடக பிரதியாக்கங்களை மேற்கொண்டமை, சிறுவர்களை மேடை நாடக செயற்பாடுகளிற்கமைவாக பயிற்றுவித்தமை, சிறுவர் நாடகங்களை நெறிப்படுத்தியமை அவற்றை மேடையேற்றம் செய்தமைபோன்ற காரணங்களால் இவர் ஈழத்தின் சிறுவர் நாடகங்களின் தந்தை எனவும் போற்றப்படுகிறார்.

கலாநிதி ம. சண்முகலிகம் அவர்கள் மாரி பொழியும் மாதமாகிய கார்த்திகை மாதம் 15ஆம் திகதி 1931ஆம் ஆண்டு அன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி என்ற ஊரில் பிறந்தார். தந்தையின் பணி காரணமாக கொழும்பு நீர்கொழும்பு பகுதியில் உள்ள போலவத்தை என்னும் பிரதேசத்தில் பிறந்த சில மாதங்களின் பின்னர் இருந்து 10 வருட காலம் வாழ்ந்தார். இதனால் சிங்கள மக்களுடனான பழக்கமும் சிங்கள மொழியில் தேர்ச்சியும் மிக்கவராக விளங்கினார். போலவத்தையில் உள்ள ஒரு ஆங்கில பாடசாலையிலேயே தனது ஆரம்பக் கல்வியை கற்றார் பின்னர் யாழ்ப்பாணம் சென்று தனது பாடசாலைக் கல்வியை தொடர்ந்தார். தன்னுடைய உயர் கல்வி சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்ததன் மூலம் இளங்கலைமாணி பட்டத்தை பெற்று பட்டதாரியானார். பட்டப்படிப்பின் பொருட்டு பொருளியல், வரலாறு மற்றும் அரசியல் போன்ற பாடங்களை தேர்ந்து கற்றார். அதன் பின்னர் யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரியல் ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த இவர் 1972ஆம் ஆண்டு காலப்பகுதியில்

பளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக பணிபுரிந்தார். 1976ஆம் ஆண்டு கொழும்பு பலகலைக்கழகத்தில் அரங்கக்கலை பட்டயப்படிப்பை (டிப்ளோமா) முடித்து பட்டய சான்று பெற்றார். தொடர்ந்து தனது ஆசிரியப்பணியில் ஈடுபாட்டுடன் தொடந்தார். இதன் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வருகை தரும் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு அந்தப் பணியையும் மேற்கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற துறையின் உருவாக்கத்திற்கு வளர்ச்சிக்கும் வித்திட்டவர்களில் பேராசிரியர் சிவத்தம்பி மற்றும் பேராசிரியர் மௌன குரு அவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு அதே வேளை பின்னரான வளர்ச்சியில் பங்காற்றியவர்களில் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் மிக முக்கியமானவர் ஆவார். இவருக்கு நான்கு பிள்ளைகள், எந்தையும் தாயும் நாடகத்திலே காண்பிக்கப்படுகின்ற போர்க்கால சூழலினால் ஏற்பட்ட தூர தேச இடம்பெயர்வுகளால் பிள்ளைகளின் பிரிவினால் ஏங்கித் தவிக்கும் பெற்றோர்களின் மனநிலையிலே இவரும் இருந்தார் என்பதும் மூத்த பிள்ளையின் நீண்டகால இடைவெளியின் பின்னரான வருகையின் பின்னர் இவர் இவ்வுலகை நீத்தமையும் இங்கு குறிப்பிடவேண்டிய முக்கியமான விடயமாகும்.

நாடகத்துறையில் இவரது பங்களிப்பை கவனத்தில் எடுத்து அதற்கான அங்கீகாரத்தை வழங்க நினைத்த கிழக்கு பல்கலைக்கழகம் 2001ஆம் ஆண்டு இவருக்கு கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கி மதிப்புரவு செய்தது. 1976ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து வெளியான பொன்மணி என்ற தமிழ் திரைப்படத்திலும் இவர் நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக இலங்கையில் இருந்து வெளிவரும் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் குழாமில் இவரும் ஒருவராக செயற்பட்டார். மண்சுமந்த மேனியர் (பாகம் 1), அன்னையிட்ட தீ போன்ற நாடகங்கள் தனியாக நூலுருப்பெற்று வெளிவந்துள்ளன. இவ்வாறு நாடக அரங்கக் கலையில் சிறப்பு முன்னோடியகத் திகழ்ந்து நாடகர் என அங்கீகாரம் பெற்றவர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம். இவர் தனது கலைப்பயணத்தை 17 தை மாதம் 2025 அன்று முடித்துக்கொண்டு இவ்வுலக வாழ்க்கையை துறந்தார். இவரது இழப்பு ஈழத்தின் நாடக அரங்கக் கலைத்துறைக்கு பேரிழப்பாக இருந்தாலும் இவரது படைப்புகளாலும் இவரால் உருவாக்கப்பட்ட அரங்கக்கலை ஆளுமைகளாலும் நாடக அரங்கக் கலைத்துறை இப்பிரபஞ்சம் இருக்கும்கால் வாழும்.

இவரைப்பற்றி எழுதுவதாயின் இன்னும் நிறையவே எழுதிக்கொண்டு போகலாம். அதற்கு சஞ்சிகைகளின் பக்க ஒதுக்கீடுகள் அனுமதிக்காது. ஆகையால் முடிந்தளவு சுருக்கமாக எழுதியுள்ளேன். ஆயினும் இவரைப்பற்றிய தேடல்களை தொடர்ந்து மேற்கொண்டு கிடைக்கும் சகல தகவல்களையும் ஆவணப்படுத்துவது எனது எதிர்கால நோக்கமாகும்.

துளிப் பாக்கள்

காற்றில் பறவைக்கூட்டம்
வானுயர்ந்து செல்கின்றது
சிறுவனின் கடதாசிப்பட்டம்

குறுக்குவழிப் பாதை
நீண்டுகொண்டே செல்கிறது
நகல் (பிட்) கடதாசி

காய்ந்துபோன பயிர்கள்
பனியால் குளிர்சியடைகின்றன
மரக்கிளையில் புட்கள்

தன்முனைக் கவிகள்

வருந்தி உழைக்கும்
உழைப்பாளர் வர்க்கம்
கருணையின்றி வதைக்கும்
முதலாளிகள் கூட்டம்

உழைப்பே உயர்வென
மனத்திடம் கொள்
வருத்தும் வறுமை
ஒளிந்திடும் பார்

சிறுகதை

- இரஜகை நிலவன் -

ராமதாஸ் டி.வி பார்த்துக் கொண்டிருந்த போதுதான் இந்துவும் ராமுவும் உள்ளே வந்தார்கள்.

ராமதாஸ் மனதில் ஏற்பட்ட குழப்பம் கொஞ்சம் அதிகமாகவே தீவிரமடைந்தது. இருந்தாலும், வெளியே காட்டிக் கொள்ளாமல், " என்ன இந்து! ராமு கூட இந்தப்பக்கம் வந்தாப்பல இருக்கு. நாம் லவ் பண்ணி மூன்று வருடங்களாகி விட்டன. எத்தனை முறை கூப்பிட்ட பிறகும் வந்ததே இல்லை!" என்றான்.

"அது…ராமு வந்து எங்கேயாவது பிகினிக் போகலாமா என்று பேசிக் கொண்டிருந்தார். அப்போது அம்மா தான் ஏற்காடு போனால் குறைந்த செலவு தான் என்றார். ஆம். நல்ல சுற்றுலாத்தலம் என்று சொல்லி பெர்மிசன் கேட்டார். அம்மாவும் ஓ.கே. சொன்னதால் கிளம்பி வந்தோம்" என்றாள்.

"ராமு உங்க வீட்டிற்கு வந்திருந்தான்"

"ஆமாம்"

"ராமு, என்னிடம் கூட சொல்லலில்லையே"

"இல்லே ராமதாஸ் அந்தப் பக்கமாக போயிருந்தேன், அப்படியே இந்து வீட்டிற்கு போய்ப் பார்த்து விட்டு வரலாமே என்று நினைத்து போய் விட்டு வந்தேன்"

"அது சரி நான் ஊருக்குப் போவதற்கு ரயில் டிககட் எடுக்க ஸ்டேசனுக்கு கூப்பிட்டபோது உனக்கு வருவதற்கு நேரமில்லை, இந்து வீட்டிற்கு போவதற்கு நேரமிருக்கிறது இல்லையா?" சிரித்தவாறு கேட்ட ராம்தாஸ்க்கு கோபம் மனதிற்குள் கொப்பளித்தது.

"அது வந்து… முதல்லே இன்றைக்கு கம்பெனியிலே ஜெனரல் பாடி மீட்டிங் இருப்பதாக இருந்தது . அதனால் தான் நான் வர முடியாதுன்னு சொன்னேன். அப்புறம் மீட்டிங் கேன்சல் ஆதனால் தான்…" என்று ராமு சொல்லி முடிப்பதற்குள்,

"இன்றைக்கு காலையிலேயே போன் பண்ணி அம்மாவிடம் இன்று சாயங்காலம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன் என்று சொன்னீர்கள்" என்று சொல்ல ராமுவின் முகம் வெளிறிப் போனது.

ராமதாஸின் மனதில் ஏற்பட்ட குழப்பம் அதிகமாகிப் போக, அவனுக்கு மெதுவாக ராமுவின் குள்ள நரித்தனம் புரிய ஆரம்பித்தது.

‘நான் இந்துவை இவனுக்கு அறிமுகப் படுத்தியதிலிருந்து தான் இவ்வளவு மாறிப் போயிருக்கிறான். ஏறக்குறைய எட்டு வருட பழக்கத்தில் நான் எங்கு கூப்பிட்டாலும் உடனடியாக எந்த வேலையிருந்தாலும் அப்படியே போட்டு விட்டு வருபவன்... இப்போது நான் காதலிக்கிற இந்து மேல் கண்ணாக இருக்கிறான்.

ஒரு வேளை முதலிலே இவன் தன் ஆசையை வெளிப் படுத்தியிருந்தால் நான் இந்துவை அவனுக்கு தாரை வார்த்துக் கொடுத்திருப்பேன்.

ஆனால் நான் காதலிக்கிறேன் என்பது தெரிந்த பிறகும்...ஏறக்குறைய பிறன்மனை நோக்குதல் தானே இதுவும்... நான் நாளைக்கு மணந்து போகின்ற பெண்ணைத் தட்டிச் செல்லப் பார்க்கும் இவனுடைய ஈன குணத்தை என்ன என்று சொல்வது.

ராமதாஸ் யோசித்துக் கொண்டிருந்த போதே, “என்ன தாஸ் யோசனையில் ஆழ்ந்திட்டீங்க. நாம் ஏற்காடு போயிட்டு வரலாமா?” என்று இந்து கேட்டாள்.



“அது...அது..வந்து...எனக்குக் கொஞ்சம் வேலைகள் இருக்கிறது இந்து” என்றான் ராம்தாஸ்.

“பார்த்தாயா. நான் உங்கள் வீட்டில் வைத்தே சொன்னேனில்லையா, ராமதாஸ் ரொம்ப வேலையாக இருக்கிறான், நானும் நீயும் போகலாம் என்று சொன்னேன், என்ன ராம்தாஸ் உனக்கு ஆட்சேபனை இல்லையே?” என்று கேட்டான் ராமு.

‘அடப்பாவி! நானும் நீயும் காதலர்கள். இவனை ஏன் இடையில் இழுத்துக் கொண்டு...என்று நேரடியாக சொல்ல முடியாமல் தவித்தான். அதையும் இவனுக்கு சாதமாக்கிக் கொள்ளப் பார்க்கிறானே’ என்று மனதுக்குள் குமுறிய ராம்தாஸ்,

“இல்லை ராமு, நான் வரவில்லை என்றால் இந்து வரமாட்டாள். நாம் எப்போது போகலாம் என்பதை நீயே முடிவு பண்ணிச் சொல்’ என்றான் ராமதாஸ்.

அதைக் கேட்ட ராமுவிற்கு ஏமாற்றம் ஏற்பட அதை வெளிக்காட்டாமல், “அதுவும் சரி தான், இந்து உனக்கு எப்போது காலேஜ் ஸ்டார்ட் ஆகிறது” என்று கேட்டான்.

“ம்...அடுத்த திங்கள் கிழமையிலிருந்து” என்றாள் இந்து.

“ஸோ...ஞாயிற்றுக் கிழமை புறப்பட்டால் ஒரு வாரத்திற்கு தங்குகிற மாதிரி துணி மணிகளெல்லாம் எடுத்துக் கொண்டுக் கிளம்பலாம்னு நினைக்கிறேன். ராமதாஸ் உன் அபிப்பிராயம் எப்படி” என்று ராமு சாதாரணமாக கேட்க முயற்சித்ததும் அவன் குரலில் ஏமாற்றம் புரையோடியது.

“அப்படியே செய்யலாம். நானும் ஆபிஸிற்கு ஒரு வாரம் லீவு எழுதிக் கொடுத்து விடுகிறேன்” என்றான் ராம்தாஸ்.

ஏற்காடு வரும் வரை சிந்தித்துக் கொண்டே வந்தான் ராமதாஸ். ராமுவும் இந்துவும் ஏதேதோ பேசிக் கொண்டே வந்தனர்.

ஒரு லாட்ஜில் இரண்டு ரூம் எடுத்து இந்துவிற்கு தனியறையும் இவர்கள் இருவருக்கும் ஒரு அறையில் தங்குவதாக ஏற்பாடானது.

அப்போது தான் ராமதாஸிற்கு ஒரு குரூர எண்ணம் எழுந்தது. ‘ஒன்று இவனை என் வாழ்க்கையிலிருந்து கழற்றி விட வேண்டும். இல்லை, இவனைத் தீர்த்துக்கட்டி விட வேண்டும்’ என்று எண்ணிக் கொண்டே சிகரெட் குடித்துக் கொண்டிருந்தவன் அடுத்த அறையில் இந்துவும் ராமுவும் பேசுவதைக் கூர்ந்து கவனித்தான்.

“ராமு, நான் ஏற்கனவே ராமதாஸை காதலிக்கிறேன். நீங்கள் இடையிலே வந்து என்னைக் கட்டிக் கொள் என்றால் எப்படி?” என்றாள் இந்து. அந்தக் குரலில் எந்தக் கோபமுமில்லாதது தாஸுக்கு ஆச்சரியமாக இருந்தது.

“நீ ஏன் கவலைப்படுகிறாய்? அவன் சம்பளம் என்ன? என் வருமானம் என்ன?. என்னைத் திருமணம் செய்து கொண்டால் மகாராணி மாதிரி வைத்துக் கொள்கிறேன்” என்றான் ராமு.

“அது சரி, இதை எப்படி தாஸிடம் சொல்லப் போகிறீர்கள்” என்று இந்து கேட்டதும் ராமதாஸ்க்கு தூக்கி வாரி போட்டது. இந்துவா இப்படி மாறிப் போனாள். பணம் காசைக் கண்டவுடன் இவ்வளவு எளிதில் காதல் கூட மாறிப் போய் விடுமா என்று நினைத்தான் ராமதாஸ்.

“அதைப் பற்றி நீ ஏன் கவலைப் படுகிறாய், நான் ராமதாஸிடம் சொல்லி அவனைத் திசைத் திருப்பி விடுகிறேன்” என்றான் ராமு.

ராமதாஸின் மனம் திகு திகுவென்று கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. இவர்கள் என்னை எவ்வளவுச் சாதாரணமாக எடை போட்டு விட்டார்கள். இவர்களைச் சும்மா விடக் கூடாது” என்று மனதிற்குள் கருவிக் கொண்டே எழுந்து வந்தவன் “என்ன இந்து. இன்றைக்கு எங்கே போகலாம்” என்று கேட்ட போது இந்து ராமுவைப் பார்த்தாள்.

“ரொம்ப டயர்டாக இருக்கிறது. இன்று ஏதும் புரோக்ராம் வேண்டாமே தாஸ்” என்றான் ராமு.

“சே! சுற்றிப் பார்க்க வந்து விட்டு இப்படி இருந்தால் எப்படி. கமான் இன்றைக்கு போட்டிங் போகலாம். நான் படகுத் துறைக்கு போய் போட் எல்லாம் அரேன்ஜ் பண்ணுகிறேன். நீங்கள் புறப்பட்டு வாருங்கள்” என்று சொல்லி விட்டு கிளம்பினான்.

படகுத்துறைக்கு வந்து கோட்டியிடம் பணம் கொடுத்து ஓட்டை விழுந்த ஒரு போட்டுக்கும் ஒரு நல்ல போட்டிற்கும் புக் பண்ணினான்.

ராமு இந்துவின் வருகைக்காக காத்திருந்தான், என்னை ஏமாற்றியவர்களே இன்று நீங்கள் படகில் போகும் போது மெதுவாக தண்ணீர் நுழைந்து படகு மூழ்கப் போகிறது. உங்களுக்கும் நீச்சல் தெரியாது. எனக்கே சதி செய்கிறீர்கள் என்று சிரித்தவாறு சிகரெட் குடித்தான்.

இந்துவும் ராமுவும் படகுத் துறைக்கு வர படகோட்டியிடம் சைகை காட்ட படகோட்டி தவறாக நல்ல படகில் ராமுவையும் இந்துவையும் ஏற்றி அனுப்பி விட்டு ஓட்டை விழுந்த போட்டியில் ராமதாஸை அனுப்பி விட்டு கையை காட்டினார், தவறுதல் புரியாமல் சிரித்துக் கொண்டே...

வருந்துகிறோம்

எமது கடந்த இதழில் காதலில் இது புதுவகை என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த மேடை நாகத்தை எழுதியவருடைய பெயர் தவறுதலாக இராஜேஸ்வரி என்று தட்டச்சு செய்யப்பட்டிருந்தமைக்கு எழுததாளருக்கும் ஏனைய வாசகர்கள் அனைவருக்கும்எமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த மேடை நாடகத்தை எழுதிய எழுத்தாளர் இராஜலட்சுமி என்பதையும் அனைவருக்கும் அறியத்தருகிறோம். பின்னர் பெயர் திருத்தம் செய்யப்பட்டு பிரதிகள் அனுப்பப்பட்டிருந்தாலும் ஆரம்பத்தில் பிரதி அனுப்பப்பட்ட சிலருக்கு தவறுதலான பெயருடனேயே அனுப்பப்பட்டிருந்தது. ஆகவே ஆரம்பத்தில் பிரதி கிடைக்கப்பெற்றவர்கள் பெயரை இராஜலட்சுமி என திருத்தி வாசிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்

உங்கள் படைப்புகளுக்கான விமர்சனம் எமது சஞ்சிகையில் வெளி-வரவேண்டும் என விரும்புவோர் நீங்கள் வெளியிட்ட படைப்பின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். முன்னுரிமை அடிப்படையில் நூல்களுக்கான விமர்சனங்கள் வெளியிடப்படும். நூல்களை அனுப்ப எமது மின் அஞ்சல் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

நன்றி

வாடகைவீடும் வலிக்கும் நினைவும்!

கவித்திலகம் வெற்றிப்பேரொளி

வாடகை வீடு
வலியோடு காலி செய்கிறேன்
அடுத்த வாடகை வீட்டிற்கு!

மாறிக்கொண்டே இருக்கின்றன
வீடும் வாடகையும்
மாறாமல் வாழ்க்கை!

புதிய வாடகைவீடு
மாறிவந்ததும் தொடங்கிவிட்டது
பழைய வீட்டுடன் ஒப்பீடு!

வாடகைவீட்டைக் காலிசெய்து
வண்டியில் ஏற்றியாகிவிட்டது
மகள் ஓடிப்போய் எடுத்து வருகிறாள்
உடைந்துபோன பொம்மையை!

காலி செய்துவிட்டு வந்தவீடு
குடியிருக்கிறது
இன்னும் நினைவில்...!

புதிய வாடகைவீடு
பால் காய்ச்சுகிறார்கள்
சொந்த வீட்டுக் கனவுடன்!

குரு அரவிந்தனின் தமிழ்ச் சிறுகதை

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

தமிழ்ச் சிறுகதை என்னும் இலக்கியம் தோன்றி ஒரு நூற்றாண்டு கடந்து விட்டது. செய்யுள் வடிவாக இருந்த தமிழ் இலக்கியம் மேலைத் தேயத்தவர் வருகையால் உரைநடை இலக்கியம் என்ற புதிய வடிவத்தையும் பெற்றுக் கொண்டது. அந்த வடிவம் இன்று மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளது. செய்யுள் இலக்கியம் படிப்பதற்குக் கடினமானது என்ற எண்ணமும் ஏற்பட்டுள்ளது. அதனால் சிறுகதை இன்று தமிழ் வாசகர்களிடையே வாசிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதற்கு ஊடகங்களும் பேருதவியாக உள்ளன. நாளேடுகள் பருவ இதழ்கள் வானொலி தொலைக்காட்சி என்பன சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தை மக்களுக்கு விரைவாக அறிமுகம் செய்தன. பல சிறுகதை ஆக்கங்கள் உருவாகின. அவற்றை எழுதிய எழுத்தாளர்கள் தொகையும் பல்கிப் பெருகியது.

நவீன தமிழ்ச் சிறுகதை என்ற முகவரியுடன் இந்த நூற்றாண்டுச் சிறுகதைகள் வெளிவரு கின்றன. அவை தொகுப்பாக்கமும் செய்யப்பட்டுள்ளன. எனவே அச் சிறுகதைகளை ஓரிடத்திலே பார்ப்பதற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அந்த வகையில் தமிழ்ச் சிறுகதைக்கு குரு அரவிந்தனின் பங்களிப்புப் பற்றிய கருத்துப் பகிர்வாக இக்கட்டுரை அமைகிறது. இன்றைய சிறுகதை எழுத்தாளர்கள் உலகெங்கும் பரவி நிற்கின்றனர். குறிப்பாக ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வு அதற்கு ஒரு காரணமாக அமைந்ததெனலாம். தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் இடங்களில் தமிழ் ஊடகங்களும் உருவாகின. அவ்வாறு உருவாகிய ஊடகங்கள் தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியையும் ஏற்றிருந்தன. இந்தச் சூழலில் குரு அரவிந்தன் என்ற சிறுகதை எழுத்தாளரையும் அடையாளம் காண முடிகிறது.

குரு அரவிந்தனின் சிறுகதைகள்

பிரசுரமான சிறுகதைகளைக் கொண்டு குரு அரவிந்தனின் கனடிய எழுத்துப் பணியின் தொடக்கம் 1988 என்று கொள்ளலாம். இக்காலக் கணிப்பு சற்று முன் பின்னாகவும் அமையலாம். இக்கட்டுரை அவருடைய சிறுகதை எழுத்துப் பணி பற்றியே கருத்துரைத்தல் என்ற வரையறையைக் கொண்டிருப்பதால் அவருடைய ஏனைய எழுத்தாக்கங்கள் இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன. இன்னும் சிறு கதைகளையே குரு அரவிந்தன் நிறைய எழுதியுள்ளார். அவரது ஆக்கங்களை வெளியிடப் பல ஊடகங்கள் விருப்போடு வாய்ப்பளித்துள்ளன. விகடன் தீபாவளி மலர் விகடன் பவளவிழா மலர் விகடன் காதல்தின மலர் ஆனந்தவிகடன் கலைமகள் கல்கி குமுதம் யுகமாயினி இனிய நந்தவனம் கணையாழி போன்ற தமிழ்நாட்டுப் பிரசுரங்களும் தாய்வீடு தூறல் உதயன் ஈழநாடு நம்நாடு தமிழர் தகவல் போன்ற கனடா நாட்டுக் களங்களும் தினக்குரல் தினகரன் ஈழநாடு வீரகேசரி (இலங்கை) வெற்றிமணி (ஜேர்மனி) புதினம், காற்றுவெளி (இலண்டன்) தென்றல், அருவி (அமெரிக்கா) உயிர்நிழல் (பரிஸ்) வல்லினம் (மலேசியா) போன்ற பிரசுரக் களங்களும் பதிவுகள் திண்ணை தமிழ் ஆதேஸ் போன்ற இணையத் தளங்களும் இவருடைய ஆக்கங்களை வெளியிட்டுள்ளன.

> **ஈழத்து இலக்கிய வரலாற்றில் இணைந்திருக்கும் புலம் பெயர் இலக்கியம் கனடியத் தமிழ் இலக்கியம் என்ற புதிய மரபின் தொடக்கத்திற்கான ஒரு அடித்தளமாக அமைய குரு அரவிந்தன் முக்கியமாகப் பங்காற்றியுள்ளதை அடுத்த தலைமுறையினர் நன்குணர்வர்.**
>
> **முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**

இது குரு அரவிந்தன் சிறுகதையைச் சர்வதேச மட்டத்தில் பல வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது. அத்துடன் எமது பிரசுரங்களில் வெளியிடுவதற்குரிய கதைகள் என்ற மதிப்பீட்டையும் வழங்கி யுள்ளன. இன்னும் உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்கள் இவரை ஒரு சிறந்த சிறு கதை எழுத்தாளராகப் பாராட்டவும் ஏற்ற வாய்ப்பை நல்கியுள்ளன. இதனால் குரு அரவிந்தனின் சிறுகதைகள் பெரும்பான்மையும் தமிழ் வாசகர்களின் தேவையை நிறைவேற்றவே எழுத்துருக் கொண்டுள்ளதால், இவர்,சர்வதேசப் பிரபல படைப்பாளியாகிறார்.

சிறுகதை உருவமும் உள்ளடக்கமும்

சிறுகதைகளின் உருவம் என்னும் போது அதன் சொல்லளவும் கருத்திற் கொள்ளப்படும் காலமிது. போட்டிக்கு என எழுதப்படும் சிறுகதைகளில் சொற்களின் எண்ணிக்கை வரையறை செய்யப்படும். எனவே அதை விடுத்து கதையின் களத்தை உருவமெனக் கொண்டால் குரு அரவிந்தனின் சிறுகதைக் களங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. புலம்பெயர் நாட்டுச் சூழல் களமாகி நிற்கும்போது வாசகருக்கு ஒரு சுய அநுபவச் சுவையையூட்டுகிறது. மற்றவர்களுக்குக் கற்பனைக் களமாய் நிற்கிறது. பணியகம்இ பனிப்பொழிவுஇ வாகன ஓட்டம்இ விருந்தகம்இ மருத்துவ நிலையம் எனக் காட்சிப்படுத்தும் களங்கள் இவருடைய சிறுகதைகளின் உருவத்தை வாசகர் தம் நினைவில் பொறிக்க வழிகாட்டுகின்றன.

உள்ளடக்கம் என்னும் பொருள் பற்றி நோக்கும்போது சிறுகதையின் மையக்கருவை அது தாங்கி நிற்கிறது. ஏறக்குறைய ஐம்பது வீதமான சிறுகதையின் கரு காதல் என்ற உணர்வையே உட்பொதிய முற்பட்டுள்ளது. மனித வாழ்வில் காதல் ஒரு பருவத்திலே தோன்றும் உடலின் உன்னுதல் என்பதை ஆசிரியர் பல கதைகளிலே புலப்படுத்தியுள்ளார். தமிழர் பண்பாட்டில் பயிற்றப்படாத பண்புநிலைகளைத் தமிழர் இயைபாக்கம் செய்ய முற்படும்போது ஏற்படும் இன்னல்களை ஆசிரியர் எழுத்திலே பதிவு செய்துள்ள புனைதிறன் பாராட்டிற்குரியது. இது புலம் பெயர் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஒரு சடங்காகிவிட்டதையும் குரு அரவிந்தன் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுகதையில் வரும் கதாபாத்திரங்கள் இக்காலத்தின் கோலத்தைக் காட்டி நிற்கின்றன. பெண் பாத்திரங்களின் உளவியல் வெளிப்பாடு அவர்கள் முன்னேற்றச் சிந்தனைகளைக் காட்டுகின்றன. பெண் விடுதலை என்ற போராட்டம் ஓய்ந்து பால் சமத்துவம் என்ற சமர் தொடங்கி யிருப்பதைப் பல கதைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. விகடனில் வெளிவந்த 'ரோசக்காரி' என்ற சிறுகதையை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். பெண்களின் உணர்வுகளைப் புரியவைக்கும் திறன் குரு அரவிந்தனிடம் இருப்பதைப் பல பாத்திரங்கள் உணர்த்துகின்றன. 'சிலந்தி' என்னும் கதையிலே வரும் நிருஜா என்ற பெண் பாத்திரத்தின் உணர்வை இவ்வாறு காட்டுகிறார்.

"சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்ததால் அவளுக்குள் இப்படி ஒரு தாழ்வு மனப்பான்மை எப்பொழுதும் இருக்கும். அவளை அப்படி நினைக்க வைத்தது அவளது பொருளாதார நிலை. பிறந்த மண்ணில் பாடசாலை டென்னிஸ் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகள் பல பெற்றவள். திருமணமாகி இங்கே வந்தபோது பல கனவுகளையும் சுமந்து வந்தாள். கணவனின் இரவு வேலையும் அதன்பின் பகுதி நேர வேலையும் அது முடிய பகலில் தூக்கமும் அவளைக் குடும்ப வாழ்க்கையில் விரக்தியடைய வைத்தது. எனவேதான் அந்த விரக்தியை விரட்ட பழையபடி டென்னிஸ் ஆடத் தொடங்கினாள்."

பெண்மையின் மனப் பிறழ்வுகளைத் தனது பாத்திரங்களுடாகக் காட்டும் குரு அரவிந்தன் பெண் மொழியிலே பேச முற்பட்டுள்ளார். பெண்களின் மரபான கற்பு நிலைக்கு அப்பால் அவர்கள் தமக்கான தடைகளைத் தாண்டிச் செல்வதை எழுத்திலே பொறிப்பதற்கும் ஒரு துணிவு வேண்டும். பெண்களின் மன அவலங்களை வெளிக்கொணர்வது ஒரு மரபு மீறிய செயற்பாடு என வாதிடு பவரும் உளர்.

ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாக வாழ்வும் இந்நாட்டிலே எனப் பாரதி காட்டிய புதுமைப் பெண்களின் போக்கிற்குப் புலம்பெயர் நாட்டு வாழ்க்கை வாய்ப்பாக இருப்பதையும் பல கதைகள் பதிவு செய்துள்ளன. ஆனால் அதற்கூடாகத் தமிழ்ச் சமூகத்திற்கு மறைமுகமாக ஆசிரியர் ஒரு செய்தியையும் சொல்ல விழைகிறார். பால் சமத்துவம் இயற்கை மனிதனுக்கு அளித்துள்ள விழுமியங்களைத் தகர்த்துவிடக் கூடாது. அது மனித வாழ்வியலில் குறிப்பாகக் குடும்ப வாழ்வியலில் குழப்பத்தையே தரும். பெண்மையின் பண்பு நலன் பேணப்பட வேண்டும். அதன் வழிகாட்டல் என்றும் தேவை என்பதைப் பல கதைகளிலே நினைவூட்டி யுள்ளார்.

மொழிநடை

குரு அரவிந்தன் கதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை ஓர் ஊடகத் தமிழ்நடை என்று கூறலாம். கதைகளின் கருப்பொருளையும் காட்சிகளையும் புலப்படுத்தல் என்ற வகையில் அந்தந்தக் களங்களுக்குரிய மொழிநடையைப் பயன்படுத்தியுள்ளார். தாயகத் தமிழ்நடை புலம்பெயர் நாட்டுத் தமிழ்நடை என இரு வகைப்பாட்டைக் கதைகளில் இனங்காண முடிகிறது. இத்தகைய வகைப்பாட்டை ஊடகங்களும் பேணிவருகின்றன. இது தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிநிலை எனக் கருதப்படுகின்றது. எதிர்காலத் தமிழர் தலைமுறை இந்த ஊடகத் தமிழ் மொழிநடை மூலமாகவே தொடர்பாடலை மேற்கொள்ளவுள்ளது என நம்பப்படுகிறது.

தொகுத்து நோக்கும்போது தமிழ்ச் சிறுகதைக்கு குரு அரவிந்தனின் பங்களிப்பாக இந்த மொழிநடையே முதன்மை பெறுகிறது. வருங்காலச் சிறுகதை எழுத்தாளர்களான புலம்பெயர் தமிழரின் தலைமுறைகள் தாம் வாழும் நாட்டில் தமிழ் மொழியைப் பிற மொழியாகக் கற்கும் நிலையில் உள்ளார்கள். அவர்கள் பண்டைய செம்மொழித் தமிழ் இலக்கியங்களைப் படிக்க முன்னர் நவீன இலக்கியங்களை நாடுவர். அவர்களுக்கு குரு அரவிந்தனின் சிறுகதைகள் நல்ல ஆற்றுப்படை நூல்கள். அதுமட்டுமன்றி நாங்களும் தமிழில் சிறுகதை இலக்கியம் படைக்கலாம் என்ற நம்பிக்கையை ஊட்டும் விண்மீன்கள். அவர்கள் வாழும் சூழலில் நடமாடிய கதை மாந்தரை அடையாளம் கண்டுகொள்வர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் இணைந்திருக்கும் புலம் பெயர் இலக்கியம் கனடியத் தமிழ் இலக்கியம் என்ற புதிய மரபின் தொடக்கத்திற்கான ஒரு அடித்தளமாக அமைய குரு அரவிந்தன் முக்கியமாகப் பங்காற்றியுள்ளதை அடுத்த தலைமுறையினர் நன்குணர்வர்.

மாண்புறு ஆளுமை

இரவி சஞ்சிகையின் ஆளுமைகள் வெவ்வேறு நிகழ்வுகளின்போது மதிப்பளிக்கப்படுவது. எமது சஞ்சிகை குழுமத்திற்கு மகிழ்ச்சியளிப்பதோடு பெருமையுமளிக்கிறது.

இலங்கையில் சாகித்திய மண்டல விருதுக்காக...

கவிஞரும் எழுத்தாளருமாகிய ஈழத்தின் பெண் ஆளுமை திருமதி உடுவிலூர்கலா அவர்களால் எழுதப்பட்ட 'அரும்புகள் உலகம்' எனும் சிறுவர் நூல் விதந்துரைக் கப்பட்டு சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டிருக்கிறார்.

இதே வேளை கடந்த வருடம் அரச இலக்கிய விருது வழங்கும் விழாவிலும் விருது வழங்கி மதிப்பளிக் கப்பட்டார் என்பதை இரவி சஞ்சிகை வாயிலாக தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம். கவிஞரும் எழுத்தாளருமான உடுவிலூர்கலா அவர்கள் தொடர்ந்து பல சாதனைகளை தமிழ் இலக்கிய உலகில் புரிந்து பல விருதுகளுக்கும் மதிப்பளிப்புகளுக்கும் சொந்தக் காரராக வேண்டுமென வாழ்த்துகிறோம்.

நூல் வெளியீடு

வைத்திய கலாநிதி ஜலீலா முஸ்ஸம்மில் அவர்களால் எழுதப்பட்ட ஹைக்கூ கவிதைக-ளின் தொகுப்பு நூல்

மஞ்சள் மாம்பூ

அண்மையில் நூலேணி பதிப்பகத்தினரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நூலின் வெளியீட்டு நிகழ்வ ஏறாவூர் நகர சபையின் பொது நூலங்கள் இணைந்து நடாத்திய தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் சிறப்பாக நடதேறியது.

இரவி சஞ்சிகையின் ஆளுமைகள் குழாமில் ஒருவராகிய இவரது சாதனைகள் குறித்து இரவி சுஞ்சிகைக்குழுமம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறது

மொழியை விருத்தி செய்யுங்கள்

வாசிப்பு அருகிவிட்டது என்ற பெருங்குற்றச்சாட்டு நம்மத்தியில் அண்மைக் காலமாக நிலவுகிறது. இக்குற்றச்சாட்டில் எனக்கு உடன்பாடில்லை. வாசிப்புக்கான நேரத்தையோ, சந்தர்ப்பத்தையோ பெற்றோர் பாதுகாவலர், ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்பதே எனது குற்றச்சாட்டு. உண்மையும் அதுவே.

பெற்றோர் பிள்ளைகளுக்கு எப்போதும் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

வீடுகளில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கைபேசிகள் உண்டு. பெற்றோர் வாசிக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. அவர்கள் கைபேசியில் அல்லவா! நேரத்தைச் செலவு செய்கிறார்கள்.

பிள்ளைகளுக்கான மொழிவிருத்தி கட்டாயமானது. இதில் வாசிப்பு அவசியமானது, முதன்மையானது.

பிள்ளைகளின் மொழிவிருத்தி என்பது, வாசித்தல், கேட்டல், பேசுதல், எழுதுதல் என்ற நான்கையும் உள்ளடக்கியதே.

ஒருபிள்ளை கணிதபாடத்தில் தேர்ச்சிபெற, கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் ஆகிய நான்கும் அவசியமான கணிதத் திறன்கள் போல, மொழிவிருத்திக்கு வாசித்தல், கேட்டல், பேசுதல், எழுதுதல் ஆகிய நான்கும் மொழித்திறன்கள் ஆகும்.

கேட்டல் திறனை விருத்தி செய்ய கேட்பதற்கு ஊக்கப்படுத்தல்,

கேட்டவற்றை வரையச் செய்தல், கேட்டவற்றை மனப்பாடம் செய்தல்

கேட்டவற்றில் இருந்து வினாக்கள் எழுப்புதல் போன்ற செயற்பாடுகளும்,

~ உடுவிலூர் கலா ~

வாசித்தல் மூலம் விருத்தி செய்ய உற்றுக் கவனித்தல், சத்தமாக வாசித்தல், ஒலி வரி வடிவங்களை சொற்களில் இனங்காணச்செய்தல், குறியீடுகளை அவதானித்தல், சொற்களுக்கான பொருளைக் கண்டுபிடிக்கச் செய்தல், பாடப் புத்தகங்களை மட்டுமன்றி கதைகள், விளம்பரங்கள், பத்திரிகைகளை வாசித்தல் போன்ற செயற்பாடுகளும்,

எழுதுதல் மூலம் பார்த்தெழுதுதல், உறுப்பாய் எழுதுதல், வினாக்களுக்கு விடையெழுதுதல் போன்ற செயற்பாடுகளும்,

பேசுதல் மூலம்

கிரகித்துப் பேசுதல், ஈடுபடுத்தல், நட்புறவுகளுடன் பேசுதல், பாக்கள் ஓதுதல், நாடகங்களில் நடித்தல் போன்ற செயற்பாடுகளும் மொழிவிருத்திக்கு அவசியமாகின்றன.

இவை யாவும் பிள்ளைகளின் வயது, வளர்ச்சி நிலைக்கேற்ப பக்குவமாகச் செயற்படுத்துவதன் மூலம் மொழியை சிறு வயது முதல் இலகுவாக விருத்தி செய்ய முடியும்.

வயதின் அதிகரிப்பிற்கேற்ப செயற்பாடுகளும் அதிகரிக்கப்பட வேண்டும்.

வளர்ச்சி என்பது நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் அடங்குவதில்லை. செயற்பாடுகளின் இலகு வழி, பிள்ளை உள்வாங்கும் அளவு என்பனவற்றைப் பொறுத்து அளவிட முடியும்.

மொழிவிருத்தியின் வளர்ச்சியில் பெரியவர்களை ஏன்? எப்படி? எங்கே? என்ற கேள்விகளால் திக்குமுக்காடச் செய்யும் நிலை உள்ளது. அந்தளவிற்கு திறன் விருத்தி அடைவது சிறப்பே.

உலகம் முழுதும் வாழும் பிள்ளைகள் தாய்மொழியறிவை ஒரே மாதிரி வளர்க்கிறார்கள்: விருத்தி செய்கிறார்கள் என்று நோம் சோம்ஸ்கி (Noam Chomsky) கூறுகிறார்.

காரணம்,

குழந்தைப் பருவத்தில் இருந்து பெற்றோரால் ஒரே மாதிரியாகவும் பின்னர் ஆசிரியரால் ஒரே மாதிரியாகவும் மொழி-விருத்தி செய்யப்படுகிறது.

மேலும், புதிய காட்சிகள் சம்பவங்களைப் பார்க்கவும் புதிய பாடல்களைக் கேட்கவும் அதனை தாம் பாடவும் முனை-கின்றனர்.பாடுகின்றனர்.இதனாலும் மொழி விருத்தி திறன் கொள்கிறது

பிள்ளைகளின் தொடர்பாடல்களும் மொழியறிவை விருத்தி செய்கின்றது. வறுமை, பசி, ஓய்வுநேரம் ,விளையாட்டு, பாடசாலை நேரம் ,உறவினர் வருகை போன்றவற்றால் பிள்ளைகளுக்கிடையே உரையாடல்கள் இடம்பெறுகின்றன.

இவை ஆரோக்கியமாக இருக்கவேண்டியதை உறுதிப் படுத்துவது பெற்றோர்,ஆசிரியர் கைகளில் தங்கியுள்ளது.எல்லாவற்றுக்கும் மேலாக ,பெற்றோரின் அன்பும் அரவணைப்பும்,ஆசிரியர்களின் அன்பும் வழிநடத்தலும் கட்டாயமானது.

மொழித்திறன் விருத்திகொண்ட பிள்ளையாலேயே எதிர்காலத்தில் தாய்மொழியை நேசிக்கவும் அடுத்த தலைமுறைக்கு தாய் மொழியை கடத்தவும் முடியும்.

பெற்றோர் முதலில் வாசிப்பை நேசித்துப் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும். வீடுகளில் சரியான உச்சரிப்புடன் கூடிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும். பிள்ளைகளுக்குத் தூய தாய்மொழியில் பெயர் சூட்ட வேண்டும். இவை யாவும் மொழித்திறன் விருத்திக்கு முக்கிய படிக்கற்கள் ஆகும்.

- உடுவிலூர்க்கலா -

விசேட திறன்மிக்க வளவாளர்களால் வழங்கப்படும் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவரா நீங்கள்

தலைமைத்துவம்	Leadership
முகாமைத்துவம்	Management
சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்	Marketing management
தொழில் முயாற்சியாண்மை	Entrepreneurship
நிறுவன முகாமைத்துவம்	Organizational Management
திட்டச் சக்கர முகாமை	Project Cycle Management
வியாபாரத்திட்ட தயாரிப்பு	Business Plan Development
தர்க்கச் சட்ட வரைபு	Logical Framework Development
கண்காணிப்பும் மீளாய்வும்	Monitoring and Evaluation
பங்கேற்பு கிராமிய கணிப்பீடு மற்றும் தேவை இனம்காணல்	Participatory Rural Appraisal and Need Assessment
வசதிபபடுத்துதல் மற்றும் முன்வைப்புத்திறன்	Facilitation and Presentation Skills
பயிற்றுவிப்பாளர் பயிற்சி	Training of Trainers
வியாபார ஆலோசனை	Business Counseling

தொடர்புகொள்ளுங்கள்: வியூகம் அபிவிருத்தி ஆலோசனைகள்

(Viuham Development Consultancies) 0771682536

ஒரு பக்க சிறுகதை

ந.இரவிச்சந்திரன் பழனி

மடை திறந்த மௌனம்

இன்னமும் எத்தனை.... நாள் தான் பயந்து பயந்து வாழ்வது....

உயிரை காப்பாற்றிக் கொள்ள ஓடி.ஒழிந்தால் எதிரிகளிடமும் மக்களிடமும் சுயமரியாதை போய்விடும். மக்களை காப்பற்ற வேண்டும். இந்த மண்ணையும் காப்பாற்ற வேண்டும். எதிரிகளை திட்டமிட்டு விரட்டியடிக்க வேண்டும். அதற்கான காரியங்களை நாட்டின் பிற வீரமறவர்களிடம் பேசி ஆலோசித்து நல் வழி காண வேண்டும்.

நம்மிடம் உள்ள படைத்தளபாடங்கள் செயல்பாடுகளை நாமே செயல் படுத்த முடியாத படி எதிரிகள் நாட்டை சூழந்த நிலையில், இதிலிருந்து தப்பிக்க!

இராணி சந்திரிகா ஓர் திட்டம் தீட்டுகிறார் புறமுதுகிட்டு ஓடலாமா இல்லை எதிர்த்து நின்று செயிக்கலாமா..?? எனும் நிலையில் முதற்கண் தனது படைவீரர்கள் அனைவரையும் போர்களம் செல்ல அஞ்சாது அவர்களை தேசபக்தி கனலுடன் பேசி உருவேற்றி ஆவேசம் கொண்டு எதிரிப்படைகளை எதிர்ப்பது குறித்தும் யார்யார் எந்த எந்த தாக்குல் நிலைகளில் நிற்க வேண்டும், எப்போது எதனைப் பயன்படுத்த வேண்டும், இதில் தன் பங்கு என்ன..எனவும், ஆலோசனை வகுத்தாள்.

ஆலோசனை வகுத்து வாள்/ கம்பு/ வேல்/ கேடயம்/ இன்ன பிற பரிவாரங்களுடன், துணிந்தவனுக்கு துக்கமில்லை என்பதை தாரக மந்திரமாக்கி, தாம் தோற்று ஓடுவது போன்ற பாவனை காட்டி, தனது எதிரிப்படைகளை நாட்டின் எல்லைக்குள் நுழையச் செய்து, அவர்களும் வெற்றிக்களிப்பில் உள் நுழைய.

ஓர் குறிப்பிட்ட எல்லையில் தடுத்து நிறுத்தி, நாலபுறமும் தீ.வைத்து அந்த தீ மூட்டத்தில் அவர்கள் திணற, வெளியேற முடியாத படி நாற்புறமும் சிறைவைக்கப்பட்டு, சோறு தண்ணீர் உணவு கிடைக்காத படி செய்து மடைக்குள் அமைதியாய்க்கிடந்த மௌனம், மடை திறந்த மௌனமாகி, வெள்ளமாய் பொங்கி புரண்டு, தம் அணிகள் திரள, எதிரிகள் இக்கட்டான நிலையில் மாட்டிக்கொண்டு துவம்சமாகினர.

அக்காலத்தில் போர்காலங்களில் போர்களத்தில் பின் வாங்கி, பின் அழித்தல் என்பதுவும் ஒன்று.

அதுவே இவர்களும் கடை பிடித்த யுக்தி.

எந்த.ஆவேசமும் போர்குணமும் மடை திறந்த வெள்ளமாக சரியான நேரத்தில் வெளிப்பட வேண்டும்.

மௌனம் சில நேரங்களில் போர்க்குரலாகவும் உருவெடுக்க வேண்டும் எரிமலை வெளிப்பார்வைக்கு அமைதியாக உள்ளில் குமைந்த படி அதுவே, அதன் இயல்பு இங்கே தாய் நாட்டைக் காக்க ராணி சந்திரிகாவின் வியுகமும் அப்படியே....

ஈழத்தில் வெளிவந்த தமிழ் திரைப்படங்கள் ஒரு தேடல்...

- தமிழ்ப்பாணன் -

இந்த இடத்தில் மிக முக்கியமான ஒரு விடயத்தை குறிப்பிட்டே ஆக வேண்டும். இலங்கையில் தமிழ் திரைப்படம் ஒன்று வெளிவருவதற்கு முன்னர் சிங்களத் திரைப்படம் ஒன்றே வெளிவந்திருந்தது. **கடவுனு பொறுந்துவ (உடைந்துபோன வாக்குறுதி அல்லது உடைந்துபோன ஒப்புதல்)** என்பது திரைப்படத்தின் பெயர்.

இடையிலே கைவிடப்பட அதனை பின்னர் ஹென்றி சந்திரவன்ச என்ற அந்த அமைப்பின் மற்றொரு உறுப்பினர் வேறு சிலருடன் இணைந்து அந்த படத்தை எடுத்து முடித்திருந்தார். ஹென்றி சந்திரவன்ச என்பவருடன் இணைந்து செயற்பட்ட சிலரும் இடையிலே அதே போட்டி பொறாமை போன்ற குழப்பங்கள் காரணமாக பிரிந்து சென்றார்கள்.

கடவுனு பொறுந்துவ (The Broken Promise) என்ற சிங்கள் திரைப்படத்தின் ஒரு காட்சி (நன்றி: சில்க் றூட் யூ ரியூப் சனல்)

கடவுனு பொறுந்துவ என்ற முதலாவது சிங்களத் திரைப்படத்தை இயக்கியவர் எஸ். எம். நாயகம் என்ற தமிழரே என்பதையிட்டு தமிழ் பேசும் மக்கள் பெருமைகொள்ள வேண்டும். இதைப்போலவே முதலாவது தமிழ்ப்படத்தை இயக்கினார் என்ற பெருமையை ஒரு சிங்கள இனத்தவர் பெற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமுதாயம்

சமுதாயம் என்ற திரைப்படம் மலையக இளம் கலைஞர்கள் ஒன்றுகூடி உருவாக்கிய சினிமாக் கலா நிலையம் என்ற அமைப்பினாலேயே உருவாக்கப்பட விருந்தது. அந்த முயற்சி கலைஞர்களுக்கிடையிலான போட்டி காரணமாக 1000 அடிகள் வளர்ந்த நிலையில்

பிரிந்து சென்ற இவர்களும் தனியாக திரைப்படம் ஒன்றை தயாரிக்க முயன்றார்கள். அப்படி அவர்கள் தயாரிக்க முயன்ற திரைப்படத்தின் பெயர் ‘புரட்சி’. இந்தப்படம் 35 மி. மீ. அளவில் உருவாக்க திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த திரைப்படமும் 7000 அடிகள் வளர்ந்த நிலையில் முடிவுறுத்தப்படாமல் நின்றுபோனது. இந்தத் திரைப்படம் நின்றுபோனதற்கும் காரணம் அந்த குழுவினருக்குள் ஏற்பட்ட பிரச்சனைகள்தான் என அறிய முடிகிறது. இந்தக் குழுவை ஆரம்பித்தவர்கள் ஹென்றி சந்திரவன்சவின் குழுவிலிருந்து பிரிந்து சென்ற கொஸ்லாந்தை பிரதேசத்தில் வசித்த ஏ. அருணன் மற்றும் வீ. தங்கவேலு ஆகியோராவர். இங்கு குறிப்பிடப்படும் தங்கவேலு அவர்கள் கிருஸ்ண

குமார் தயாரித்த ‘தோட்டக்காரி’ திரைப்படத்தில் அவருடன் இணைந்து செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சில்லையூர் செல்வராசன் அவர்கள் சமுதாயம் திரைப்படத்தயாரிப்பின்போது தயாரிப்பின் கணக்கு வழக்குகளை கவனிப்பதில் உதவியாக இருந்திருக் கிறார். சில்லையூர் செல்வராசனின் கருத்துப்படி இந்தத் திரைப்படம் கொழும்பு கொட்டஹேனா பகுதியில் அமைந்திருந்த டொமினியன் திரையரங்கில் திரை யிடப்பட்டதாக தெரியவருகிறது, அதே வேளை திரையரங்கை பெற்றுக்கொள்வதில் இருந்த தடைகளால் இந்த திரைப்படம் பொரளையில் அமைந்துள்ள வை. எம். பி. ஏ. மண்டபத்தில் காட்சிப்படுத்தலுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய் யப்பட்டு ஒரு வாரகாலம்வரை திரையிடப்பட்டாதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அதன் பின்னர் பாடசாலைகள் மன்றங்கள் போன்றவற்றில் திரையிடப்பட்ட இத்திரைப்படம் சிலோன் தியேட்டர்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் தெமட்டகொடையில் அமைந்துளள்ள மானெல் திரையரங்கில் ஒரு வாரகாலம் திரைய-ிடப்பட்டதோடு இந்த நிகழ்விற்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ் ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் தலைமை வகித்திருந்தமை சிறப்பம்சமாகும்.

நான் முன்னர் குறிப்பிட்ட இரண்டு திரைப்படங்களும் 16 மி.மீ. அளவிலான திரைப்படமாகவே எடுக்கப்பட்டவை. சமுதாயம் திரைப்படம் 33 மி. மீ அளவிலான முழுநீளத் திரைப்படமாகவே எடுக்கப்படவிருந்ததாகவும் அப்போது படத்தயாரிப்புக் குழுவினருக்கு இருந்த நிதிமுடை காரணமாக அந்தத்திரைப்படம் பின்னர் 16 மி. மீ. அளவில் எடுக்கப்படதாகவும் தெரியவருகிறது. அத்தோடு குசுமலதா திரைப்படத்தில் நடித்த ருக்குமணி தேவி ஒரு காலத்தில் இலங்கையின் பிரபலமான அழகு கன்னியாக வலம் வந்தவர். இவர் நடித்த ஒரே தமிழ் திரைப்படம் இதுவாகும். இந்த திரைப்படத்தில் ஒரு பாடல் இவரது சொந்தக் குரலிலும் பாடபட்டிருந்தது. இது அந்தக் காலப்பகுதியில் மிகப்பிரபலமாக எங்கும் ஒலித்த அன்னையைப்பற்றிய ஒரு பாடலாகும். பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் ருக்குமணிதேவி ஒரு வாகன விபத்தில் சிக்கி மரணமானார். அந்த விபத்து நடந்த இடத்திற்கு அண்மையில் இவரது உருவச்சிலை ஒன்று அமைக்கப்பட்டு இன்றும் அது அவ்விடத்திலே உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஜெயமன்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட சிங்கள திரைப்படமான ‘சங்கவுனு பிலித்துற’ என்ற திரைப்படத்தையே அவர் தமிழ் மொழியில் குசுமலதா என்ற பெயரில் எடுத்திருந்தார்

தோட்டக்காரி

தோட்டக்காரி திரைப்படம் 1963ஆம் ஆண்டு வி. தங்கவேலு என்பவரால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட திரைப்படம். இந்த திரைப்படமே இலங்கையில் இருந்து வெளிவந்த முதலாவது 33 மி. மீ இல் படமாக்கப்பட்ட முழுநீளத்தமிழ் திரைப்படமாகும். பி. எஸ். கிருஸ்ணகுமார் அவர்களால் இத்திரைப்படம் இயக்கப்பட்டதோடு கதாநாயகனாகவும் அவரே நடித்திருந்தார். அது மட்டுமன்றி படத்திற்கான திரைக்கதையையும் அவரே எழுதியதோடு பாடல்களையும் எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே அந்த நாட்களிலேயே அநேகமான வேலைகளை ஒரு நபரே மேற்கொள்ளும் முயற்ச்சி பழக்கத்தில் இருந்ததற்கு இது சான்றாக இருக்கிறது. மலையகத்தை பின்னணியாககொண்டு கதையமைக்கப்பட்டிருக்கிறது. முதலாளி சொத்துக்காக சகோதரனால் கொலை, சொத்துகளை அபகரித்த சகோதரன் மக்களை துன்புறுத்துவது, கணக்குப்பிள்ளை மகன் மற்றும் வள்ளி காதல் என்று கதை நகர்கிறது.

இந்தத் திரைப்படமானது இலங்கையில் மலையகப் பிரதேசத்தின் சூழலை மையப்படுத்திய திரைப்படமாக எடுக்கப்பட்டது. இப்படத்திற்கான இசையமைப்பை கே. எம். ஜவாஹீர் மேற்கொண்டிருக்கிறார். நாடகக் கலைஞர்களாகவிருந்த வீ. மோகன்ராஜ், ஆர். வரதரா ஜன், தங்கவேலு, சாந்தி, மாஸ்டர் பிரகாஸ் முத்துவேலு, ஜாபீர் குமார், தங்கையா, வசந்தி, நல்லையா, வீணைகுமாரி ஆகியோர் நடித்திருந்தார்கள் இவர்களுடன் ஜெயஸ்ரீ என அழைக்கப்பட்ட சோபாலிக்கா குருஸ் கதாநாயகியாக நடித்தார். அங்கவை என அறியப்படும் கணேசாள் மற்றும் பி. எஸ். கிருஸ்ணகுமார் ஆகியோர் பாடல் வரிகளை எழுத

சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்த தோட்டக்காரி திரைப்படம் பற்றிய விளம்பரம்

ஜி. எஸ். பி. இராணி, ஜி. வரதராஜா, கௌரீஸ்வரி இரா ஜப்பன் மற்றும் கே. குமரவேல் ஆகியோர் பாடியிருக்கிறார்கள்.

இந்த திரைப்படத்திற்கான ஒளியமைப்பு தயானந்த விமலவீர என்பவரால் மேற்கொள்ளப்பட படத்தொகுப்பை துவான் கபூர் என்பவர் செய்து வழங்கியிருக்கிறார். தோட்டக்காரி திரைப்படமானது 1963ஆம் ஆண்டு கார்த்திகை 27 அன்று இலங்கையின் யாழ்ப்பாணம், கொழும்பு மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பல திரையரங்குகளில் திரையிடப்பட்டது.

பாசநிலா

அடுத்து 1966 ஆம் ஆண்டில் கார்த்திகை மாதத்தில் 'பாசநிலா' என்ற திடைப்படம் வெளி வந்திருக்கிறது. இந்த திரைப்படமும் 16 மி. மீ. அளவிலான ஒரு குறும்படமாகவே வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த திரைப்படத்தை ஜோசப் தேவானந்தன் என்பவர் இயக்கியிருக்கிறார். இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர். இவரது மனதில் உருவாகிய திரைப்படத்தயாரிப்பு ஆசையே இத்திரைப்பட உருவாக்கத்திற்கு வித்திட்டது. இந்தத் திரைப்படம் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சூழலில் எடுக்கப்பட்ட படம் அது மட்டுமன்றி இதுவே இலண்டனில் மாநகரில் வெளியிடப்பட்ட முதல் இலங்கைத் தமிழ் திரைப்படம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்தத் திரைப்படத்தில் இலங்கையின் பிரபல பொப் இசைப் பாடகரான ஏ. ஈ. மனோகரனும் ஜயேந்திராவும் நடித்திருந்ததாக அறியக்கிடைக்கிறது. இவர்கள் இருவரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவர்களாவர். இவர்களோடு செல்வி ஐடா துரைசிங்கமும் மற்றும் புனித யுவானியார் கல்லூரி (சென் ஜோன்ஸ் கொலேஜ்) மாணவர்கள் சிலரும் நடித்திருந்தனர். பாச நிலா திரைப்படம் பற்றி மேலதிகமான தகவல்களை கிடைக்கக்கூடிய பதிவுகளிலிருந்து பெற முடியவில்லை.

கடமையின் எல்லை

யாப்பாணம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஆங்கில விரிவுரையாளராக இருந்த திரு. எம். வேதநாயகம் அவர்கள் திரைப்படத்தயாரிப்பின் பால் ஈர்க்கப்பட்டதால் தயாராகிய திரைப்படம்தான் 'கடமையின் எல்லை' என்ற திரைப்படம். சேக்ஸ்பியரின் ஹம்லாட் என்ற ஆங்கில நாடகத்தின் கதையை தழுவி எடுக்கப்பட்டதே இந்த திரைப்படம். இத்திரைப்படத்தின் திரைக்கதை, வசனம், பாடல்களை பஸ்தியாம்பிள்ளை, எம். விக்டர் மற்றும் வித்துவான் ஆனந்தராயர் ஆகியோர் எழுதியிருந்தார்கள்.

எம். வேதநாயகம் அவர்களே இதனை நெறியாள்கை செய்ததோடு இதற்கான இசையமைப்பையும் மேற்கொண்டிருந்தார். எம். உதயகுமார், ஏ. இரகுநாதன், தேவன் அழகக்கோன், ஜி நிர்மலா, ஆர் அமிர்தவாசகம், எஸ். ரி. அரசு, கே. துரைசிங்கம், ஆர். காசிநாதன், எஸ். பஸ்தியாம்பிள்ளை மற்றும் பொனி ரோபேட்ஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களையேற்று நடித்திருந்தார்கள். எம். ஏ. கபூர் மற்றும் எஸ். ரி. அரசு ஆகியோர் ஒளிப்பதிவை மேற்கொண்டிருந்தனர். எஸ். ரி. அரசு ஒரு ஒப்பனைக் கலைஞரும் புகைப்படக்கலைஞரும் ஆவார். இந்தத் திரைப்படம் 4ஆம் திகதி ஐப்பசி மாதம் 1966ஆம் ஆண்டு திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தப் படத்தை உஉருவாக்குவதற்காகவே படத்தின் தயாரிப்பாளர் கலாபவன பிலிம்ஸ் என்ற நிறுவனத்தை உருவாக்கினர் என்று தகவல்கள் மூலம் அறியக்கிடைக்கிறது.

டாக்சி டிரைவர்

இலக்கியத் துறையில் இருந்த ஈடுபாடு காரணமாக ஏற்பட்ட தொடர்பில் காதல் மலர்ந்து திருமணம் செய்துகொண்ட காதல் தம்பதிகளென பேசப்பட்ட யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த சோமசேகரனும் மாலினிதேவியும் அவர்களுக்கு உருவாகிய திரைப்படத் தயாரிப்பு ஆர்வாத்தால் தங்கமணி பிக்சர்ஸ் என்ற படக்கம்பனியை உருவாக்கி இந்தக் கம்பனி மூலம் தயாரித்த திரைப்படமே 'டாக்சி டிரைவர்' திரைப்படம். ஆகும். லெனின் என்பவரால் எழுதப்பட்ட மூலக் கதைக்கு பி. எஸ். நாகலிங்கம் என்பவர் வசனம் எழுதியிருக்கிறார். யூ. எல் ஹமீட் அவர்களள் பாடல் வரிகளை எழுத கௌரீஸ்வரி, ஏப்ரகாம், அன்ரனி ஆகியோர் பின்ன குரலுக்கு ஆர். முத்துசாமி என்பவர் இசையமைத்திருக்கிறார். எம். ஏ. கபூர் அவர்கள் இதற்கான ஒளிப்பதிவை மேற்கொண்டிருக்கிறார்.

திருமதி மாலினிதேவி திரைப்படத்தை தயாரிக்க சேமசேகரன் திரைப்படத்தின் நெறியாள்கையை மேற்கொண்டிருக்கிறார். சானா என அழைக்கப்பட்டட கலாஜோதி எஸ். சண்முகநாதன், ரொசாரியோ பீரிஸ், தேவன் அழககோன், யோகா தில்லைநாதன், சந்திரகலா, எம். பி. பாலன் போன்றவர்களுடன் இந்த திரைப்படத்தில் நாடகக் கலைஞரான எஸ் ரி அரசு அவர்களும் நடித்துள்ளார். இந்த திரைப்படமானது 27ஆம் திகதி மார்கழி மாதம் 1966ஆம் ஆண்டு திரை அரங்குகளில் திரையிடப்பட்டது.

வியாபாரம் செய்யினமாம்..!!!

~ நயினை அரா..

கவிதை

காலம் மாற மாற கழுதை கண்டெறும்பாகிறது
ஞாலத்தில் நியாயமும் நிம்மதியும் செத்தே போச்சு
கடவுளாய் எண்ணு
உன் வாடிக்கையாளனை என்று
சொன்ன காந்தி தத்துவம்
புதையுண்டு போச்சு

விரும்பினால் வாங்கு
வழியைவிட்டு நகரென்ற
மனோ நிலையில் புதிதாய் முழைத்த
முதலாளி கும்பலின் சாக்கடை
வியாபாரத்தின்
நாற்றத்துள்ளே தான் நாமும்

விருந்தாய் வரும் வாடிக்கையாளனை
அரவணைக்கும் விபச்சாரிகளிடத்து
வரும் நாகரிகம்
செட்டு வியாரிகளிடத்து
ஒரு சொட்டும் இல்லை பார்...

காசே கடவுளாய் ஆவேசம்படும் கும்பலுக்கு
ஆணவச் செருக்கேறி நீக்கமுடியா பட்டையாய்
உணர்வோடு ஒட்டி இருக்க
தாம் கோவணத்தோடு இருந்த கதை
புரியாதிப்போ...

சடுதியாய் வந்து முழைத்தவருக்கும்
சரித்தராமாய் உழைத்தவருக்கும்
வேறுபாடு இல்லைப்பார்...
காலம் உனக்கும் எனக்கும் ஒன்றாய் இல்லை
என்றாலும் நாமிருவரும் நிலையற்றவர்
உணராயா ஈனப்பிறவிகளே...

வாடிக்கையாளன் உனக்கானவன் அல்ல
நீயே அவனுக்கானவன்...
உன் ஒவ்வொரு அசைவிற்கம் பலம்
சேர்பவனை
பாராமுகமாய் இருக்கும் பரதேசிகளே
இது உங்களுக்கான சமர்ப்பணம்..
வியாபாரம் செய்யினுமாம்..!!!

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 'விருது விழா -2024'ஸ்காபரோ சிவிக்சென்றர் மண்டபத்தில் 26-10--2024 அன்று இணையத்தின் தலைவர் திரு. கனகசபை ரவீந்திரநாதன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 31 ஆண்டுகளாக இந்தக் கனடிய மண்ணில் சிறப்பாக இயங்கிவரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர்களாக திரு. தெ.சண்முகராசா, திரு. திருமாவளவன், திரு. வி.கந்தவனம், திரு.சின்னையா சிவநேசன், திரு.ஆர். என். லோகேந்திரலிங்கம், திரு.சிவபாலு தங்கராசா, திரு. சின்னையை சிவநேசன், திரு.சி. சிவநாயகமூர்த்தி, பேராசிரியர் திரு.இ. பாலசுந்தரம், திரு.குரு அரவிந்தன், திரு. அகணி சுரேஸ், திரு.க. ரவீந்திரநாதன் ஆகியோர் இதுவரை பணியாற்றியிருந்தனர்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் விருதுவிழா – 2024

- குரு அரவிந்தன் -

ஒருவர் வாழும்போதே அவரைக் கௌரவிக்கும் முகமாக அவர்கள் தமிழ் மொழி மற்றும் தமிழ்க்கலாச்சார வளர்ச்சிக்காக ஆற்றிய அரிய சேவைகளைப் பாராட்டி மட்டுமல்ல, புலம்பெயர்ந்த மண்ணிலும் தமிழ் மொழியை வளர்ப்பதில் ஆர்வத்தோடு இவர்கள் காட்டும் ஈடுபாட்டைப் பாராட்டியும், இந்த 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கும் நிகழ்வு கனடாவில் இடம் பெற்றிருந்தது. கனடாவில் ஒரு இணையத்தால் வழங்கப்படும் உயர் இலக்கிய விருதாக இந்த விருது மதிக்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது. இந்த விருதுகளைப் பெறுவதற்காகக் கனடா தமிழ் சமூகத்தில் இருந்து மதிப்புக்குரிய ஆறு பெரியோர்களை செயற்குழுவினர் இம்முறை தெரிவு செய்திருந்தார்கள்.

மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடாப்பண், தமிழ்தாய் வாழ்த்து ஆகியன செல்வி சோலை இராஜ்குமார், சென்னி இராஜ்குமார், சோழன் இராஜ்குமார், டிலன் கென்றிக் பிளசிடஸ் ஆகியோரால் இசைக்கப்பெற்றன. அடுத்து அகவணக்கம் இடம் பெற்றது. இணையத்தின் துணைத்தலைவர் திரு. குரு அரவிந்தனின் வரவேற்புரையைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம் பெற்றது. இதில் திருமதி வனிதா குகேந்திரனின் கலைக்கோயில் மாணவிகளான செல்வி ஆதுரா கமலராஜன், செல்வி ஆனிரா கமலராஜன், செல்வி வஸ்மிகா ராகுலன் ஆகியோர் பங்கு பற்றினர். இதைத் தொடர்ந்து திரு. க. ரவீந்திரநாதனின் தலைவர் உரை இடம் பெற்றது. அடுத்து செல்வன் தருண் செல்வம், செல்வி வைஸ்ணவி சதானந்தபவன் ஆகியோரது இளையோர் உரையும், காப்பாளர் சிந்தனைப்பூக்கள் திரு. எஸ். பத்மநாதனின் உரையும் இடம் பெற்றன.

அடுத்து விருது விழா - 2024 மலரைத் தொகுப்பாசிரியர் திரு. குரு அரவிந்தன் வெளியிட்டுவைக்க, தலைவர் திரு. ரவீந்திரநாதன் கனகசபை பெற்றுக் கொண்டார். வெளியீட்டுரையில்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வரலாறு இந்த மலரில் புகைப்படங்களுடன் சுருக்கமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக் குரு அரவிந்தன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து விருது வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்காக பண்டிதர் திரு. ச.வே பஞ்சாட்சரம், கலாநிதி திருமதி கௌசல்யா சுப்பிரமணிய ஐயர், தேசபாரதி திரு. வே. இராசலிங்கம், எழுத்தாளர் திரு. முருகேசு பாக்கியநாதன், பத்திரிகை ஆசிரியர் திரு. நாகமணி லோகேந்திரலிங்கம், கலைஞர் திரு. வயரமுத்து திவ்வியராஜன் ஆகியோரே செயற்குழுவினரால் இம்முறை தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களைப் பற்றிய அறிமுக உரையை திருமதி ராஜினி சுபாகரன், திருமதி நாகேஸ்வரி ஸ்ரீ குமரகுரு, திரு. ஜெகதீஸ்வரன் ஐயாத்துரை, பாஸ்டர் திரு. சோதி செல்லா, திருமதி கமலவதனா சுந்தா, திருமதி ஜோதி ஜெயக்குமார் ஆகியோர் நிகழ்த்தினர். விருதாளர்கள் சான்றிதழ், விருது மற்றும் மலர்க்கொத்துக் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து விருதாளர்களின் ஏற்புரை இடம் பெற்றிருந்தது.

சென்ற வருடம் - 2023, திரு. அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் விருதாளர்களாகப் பேராசிரியர் கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி, பேராசிரியர் கலாநிதி நாகராஜ ஐயர் சுப்பிரமணியன், முனைவர் பால சிவகடாட்சம், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், திரு. தங்கராசா சிவபாலு, திரு. சின்னையா சிவநேசன், திரு பாலா குமாரசாமி (தேவகாந்தன்), சிந்தனைப்பூக்கள் திரு. பத்மநாதன், திரு. தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் (சோக்கல்லோ சண்முகம்) திரு. தெய்வேந்திரன் சண்முகராஜா (வீணைமைந்தன்) ஆகியோருக்கு விருது வழங்கிக் கௌரவித்திருந்தோம்.

இணைத்தின் ஆரம்பகாலங்களில் தலைவராகவும், காப்பாளராகவும் இருந்த அமரர் கவிஞர் திரு. வி. கந்தவனம், காப்பாளராக இருந்த மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் பொ. கனகசபாபதி, காப்பாளர்களாக இருந்த அமரர் எழுத்தாளர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம், அமரர் க.தா. செல்வராசகோபால், அமரர் க.செ.நடராசா, மற்றும் அமரர் வித்துவான் க. செபரத்தினம், அமரர் பண்டிதர் மா.சே. அலெக்ஸாந்தர், அமரர் மொகமட் ஹன்ஸீர் ஆகியோருக்கும் எழுத்தாளர் இணையம் ஏற்கனவே 10 வது ஆண்டு நிறைவின் போதும், அதன் பின் வெள்ளிவிழாவின் போதும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சிறப்பு மலரை வெளியிட்டு வைத்த எழுத்தாளர் குரு அரவிந்தன் மெய்நிகர் மூலம் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் எழுத்தாளர் அரங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். ‘இதுவரை 26 எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் இந்த நிகழ்வில் கலந்து தங்களைப் பற்றியும், தங்கள் ஆக்கங்கள் பற்றியும் உரையாற்றி இருக்கின்றார்கள். இந்த நிகழ்வில் இதுவரை பங்கு பற்றியவர்களின் பெயர்களை இங்கே தருகின்றேன். எழுத்தாளர் குரு அரவிந்தன், சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், சின்னையை சிவநேசன், பேராசிரியர் இ.பாலசுந்தரம், பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன், பண்டிதர் சா.வே. பஞ்சாச்சரம், எழுத்தாளர் கனி விமலநாதன், எழுத்தாளர் ஆர்.என். லோகேந்திரலிங்கம், எழுத்தாளர் இராசலிங்கம் வேலாயுதர், எழுத்தாளர் பால சிவகடாட்சம், எழுத்தாளர் த. சிவபாலு, கலைஞர் சோக்கெல்லோ சண்முகம், எழுத்தாளர் வீணைமைந்தன் கே. ரி. சண்முகராசா, எழுத்தாளர் முருகேசு பாக்கியநாதன், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், கலைஞர் வைரமுத்து திவ்வியராஜா, கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம், எழுத்தாளர் ரவீந்திரன் கனகசபை, எழுத்தாளர் சாம் தில்லையா, கவிஞர் புகாரி, நாடகக் கலைஞர் கணபதி ரவீந்திரன், எழுத்தாளர் அகில் சாம்பசிவம், எழுத்தாளர் செல்வம் அருளானந்தம், எழுத்தாளர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராசா, எழுத்தாளர் தேவகாந்தன், எழுத்தாளர் வ.ந. கிரிதரன், எழுத்தாளர் குரும்பசிட்டி ஐ. ஜெகதீசன் ஆகியோர் இதுவரை கலந்து கொண்டனர் என்று குறிப்பிட்டார்.

விருதாளர்களின் ஏற்புரையைத் தொடர்ந்து, விளம்பரதாரர்களும், தன்னார்வத் தொண்டர்களும், நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்களும் கௌரவிக்கப்பட்ட பின், செயலாளர் முனைவர் திருமதி வாசுகி நகுலராஜா அவர்களின் நன்றியுரை இடம் பெற்றது. இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற முன்னின்று பாடுபட்ட அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சித் தொகுபாளர்களாக திருமதி ஜோதி ஜெயக்குமார், திரு அகணி சுரேஸ் ஆகியோர் சிறப்பாகப் பணியாற்றியிருந்தனர்.

குடையுடன் துலாவி நின்ற குவலயத்து பொங்கல் இன்று.......

கவிதை

குடையுடன் துலாவி நின்ற
குவலயத்து பொங்கல் இன்று.......
மழையுடன் வெள்ளம் வந்து ெ
மழுக்கிட்ட இடத்தை அள்ள
மனையாளும் மகனும் ஆங்கே
மனங்களில் உவகையின்றி

மளமள எனவே பொங்க
மழையதும் குறையவில்லை
மனங்களில் அமைதியில்லை....

வர்ணனே வந்தான் என்று
பகலவன் பாக்கா பானை
பாலினை கண்டு பொங்க
கனமழை விடவே இல்லை...

மடையிட்ட பொங்கலுண்ண
மறைந்தவன் வரவேயில்லை.....
சடு குடு எனவே பொங்கல்
வேலைகள் பறந்த போதும்
அடுப்பிடை இட்ட

நெருப்பொடு சூடாய் நானும்
பொங்கியே நின்றேன் பாரேன் என்னுடன்
பொங்கினாள் அவளும் வந்து
பானையோ பொங்கவில்லை.....

வடையுடன் கிடந்த சட்டி
எண்ணை இழந்தது கருகிப் போக
கதிரவா நீயும் இன்னும்
மழை குளிரினுள் உறையலாமோ?
கதிரினை பரப்ப காலம்
தேவையோ இன்னும் சொல்லு.....

குரோதியின் பொங்கல்
எங்கும் குடைக்குளே இருந்தே பொங்க
குவலயம் கண்ட பொங்கல்
சரித்திரம் சொல்லும் என்றும்.....

– நயினை அரா –

ஆசையில் ஓர் கடிதம்

— ஜெனனி. மோ —

அரவிந்தன் கலைப்பீடத்தில் பேராதனை பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன்.

அவனோடு அதே பல்கலையில் கற்றவள் நிவேதிகா. அரவிந்தன் மிகவும் கெட்டிக்காரன். படித்து முடித்த உடனே நிறுவனம் ஒன்றில் வேலை செய்யத் தொடங்கி விட்டான்.

அந்த கம்பனியில் அரவிந்தன் அதிக சம்பளம் பெறும் தொழிலில் அமர்த்தப்பட்டான். பல்கலையில் சேர்ந்த நாளில் இருந்தே நிவேதிகா மீது காதல் கொண்டான். நிவேதிகா ஆரம்பத்தில் நல்ல நட்பாக அரவிந்தனுடன் பழகினாள். அரவிந் காதலைச் சொல்ல எண்ணினான். நிவேதி மறுத்து விட்டால் இருக்கும் நட்பும் இல்லாமல் போய்விடுமே என்று பயந்தான்.

தனியாக இருந்த சமயங்களில் காதலைச் சொல்ல எண்ணினான். ஆனால் அவனால் கூற முடியவில்லை. நிவேதி மனது முழுவதுமாக நிறைந்திருந்தாள். காதலைச் சொல்ல முடியாமல் போகவே, ஆசையில் ஓர் கடிதம் எழுதினான்.

பல்கலைக்கழகத்தில் தினமும் விரிவுரைகளுக்கு செல்லும் போது நிவேதிகாவைக் கவனிப்பான். நிவேதிகாவுடன் அதிக நேரம் பேசுவதில் மகிழ்ச்சி அடைந்தான்.

"நிவேதிகா! என்ன தினமும் அரவிந்தன் எமது வகுப்பு வழியாக செல்கிறானே?" என்றாள். "அதுதான் எனக்கு எதுவும் புரியலடி" என்றாள். "ஆனால் பல்கலையிலும் நம் வகுப்பில் எல்லோரும் நீங்கள் இருவரும் காதல் செய்வதாக பேசிக்கொண்டே தான் இருக்கிறார்கள்" என்று சிந்துயா சொன்னாள். "சீ போடி..." என்று கூறிவிட்டு நகர்ந்தாள்.

வகுப்பை விட்டு வெளியே வந்தாள். அருகாமையில் இருந்த வட்ட பெஞ்சில் அரவிந்தன் ஏதோ ஒன்றை தாளில் புதிதாக எழுதுவதை கண்டாள். அவன் அருகில் சென்றாள்.

அரவிந்தன் கையில் வைத்திருந்த புத்தகத்தை நிவேதா பார்த்து விட்டாள் என்பதற்காக புத்தகத்தை எடுத்து ஒழித்தான். அதனைப் பார்த்த நிவேதா புத்தகத்தை பறித்தாள். கடிதம் இருந்ததைக் கவனித்தாள். அதனை பிரித்து வாசித்தாள். **"நிவே நிச்சயமாக வாழ்க்கைத் துணையாக நீ தான் வரவேண்டும்"** என்று எழுதி இருந்தது. மகிழ்ச்சியில் மனதில் புன்னகை பூத்தது.

ஜெனனி . மோ

யுகங்களெல்லாம்....

கவிதை

டாக்டர் ஜலீலா முஸம்மில் (ஏறாவூர் இலங்கை)

வரவேற்புக்கு இருக்கும்
மிடுக்கும் துடிப்பும்
வழியனுப்புதலில் இருப்பதில்லை.
இலையுதிர் காலத்தில்
இறுகிக்கிடக்கின்றன இதயங்கள்

பிரியாதிருக்க ஓர்
பிரியாவிடையா?
பிரியத்துக்குரியவரைப்
பிரிவது
பிரியாவிடையா?
பிரிகின்ற வேளையதற்கு
பிரியாவிடை என்று பெயர் பொறித்தது யாரோ?

நினைவுகளின் இடுக்குகள்
நிரம்பி வழிகின்றன
இதயச்சாவி கையிலிருந்தும்
தொலைந்து காணாமல்
போனதாய் துயர்

வந்து சேர்வதும்
விலகிச்செல்வதும்
பறந்து விடுவதும்
ஓய்வு கொள்வதும் சகஜமாக
வாழ்க்கைச்சாலையின்
பயணிகள் நாம்

ஓடுவதும் பின்னர் நாடுவதும்
உலகத்தின் சுழற்சி
ஓடுபாதை விட்டுக் கொஞ்சம்
விலகிச் செல்கிறாய்
என்று தேற்றிக் கொள்கிறேன்

உன்
கிளைகள் மீதமர்ந்த குருவியானேன் சிலநாள்
இப்போது
பெருவிருட்சத்தின் சாட்சியங்கள்
வரம் கேட்டு வருகையில்
விடை கொடுக்க வேண்டுமே..

யுகங்களெல்லாம் நம்புகழ் பாடட்டும்
எழுதிச்சென்ற
யாகங்களெல்லாம்,
இனிமேல்தான் பழத்தோட்டம்

இது,
அருவிகளின் ஆரவாரக் காலம்,
ஆழியின் ஆழம் இனிப்பெருகட்டும்

சென்று வா
வென்று திரும்பு
என்னுள்ளமெனும் அமுதச்சோலைக்கு
அதை இன்னொரு
தாய்வீடாக எண்ணிக்கொள்

பிரிவின் துயரில்
கண்ணீர்த் துளிகள் பெருகினாலும்,
ஞாபகங்களில் பொதிந்த
மகிழ்வின் இறுக்கங்கள்
அதை உலர வைக்கும்

நடந்து முடிந்த நிமிடங்கள்
பரவசங்கள்...
நடக்க இருக்கும் அதிசயங்கள்
நடந்தேற என் வாழ்த்துக்கள்

எங்கள்
இதயத்தின் ஆழத்தில் விழுகின்றன
இதமாய் சில
ஆனந்த கங்கை
கண்ணீர் கலந்து
உப்பு சுவை கரிக்கிறது

சென்று வா
இணைந்த இதயங்கள்
பிணைந்த சேர்மானங்கள்
அடுத்தடுத்து தொடரும்
அன்பின் ஆலாபனைகளும்
ஆயுள் நீளம் வரை அகலாது
அண்மித்திருக்கட்டும்.

அதுவரை எப்படியாவது
உயிர் பிழைத்துக் கிடப்பேன்.

காதல் இனிமையே

உன்தனின் கயல்விழிகளின்
காந்தப் பார்வையே
என்னைக்கட்டி இழுத்து
கவர்ந்ததே என்தனையே

வெண்நில வழகியே
மின்னுகின்ற நட்சத்திரத்
தோழிகளுடன் எங்குமே
எளிமையாக பழகும்

இனியவளே உன்னைக்
கண்டநாள்முதல்
காதல் கொண்டேனே
அழகிய உன் புன்சிரிப்பில்

என்னையே இழந்தேனே
அன்புடன் பேசிய
உன் இனிய பேச்சால்
என்னை மயக்கினாயே
காதல் இனிமையே

என்றும் அழியாததே
காதல் சிலபல
கடினமான நிலமை
வந்தாலுமே இறுதியில்

காதலில்வெற்றியே
காதலர்கள் தினத்தன்று
என் காதலைக் கூறி
யாசிக்கிறேன் சம்மதிப்பாயா

— லீலா அனந்த் —

மூன்று

இதயமும் இதயமும்
இணைந்தே இருந்தது
இரவுகள் யாவும்
குளிர்ந்து போனது

உறவுகள் துளிர்விட
நேரம்.வந்தது
.உயிரினும் மேலாய்
உதிரம் உருகுது

பாசத்தை காட்டும்
நேரம் வந்தது
வேசம் என்பதே
வெளியேறிப் போனது

கண்ணும் கண்ணும்
கலந்து போனது
கவிதைகள் பாடிட
.நேரம் வந்தது

கனத்த உள்ளமும்
லேசாய் ஆனது
கனவுகள் யாவும்
நிசமாகப் போகுது

கவலைகள் இனிமே
பறந்திடப்போகுது
ஒன்றும்.ஒன்றும்.
மூன்றென ஆகுது

— இரவிச்சந்திரன் .ந — பழனி

வதனம் மஞ்சரி – கனடா சிறப்பிதழ் வெளியீடு

- சுலோச்சனா அருண் -

சென்ற ஞாயிற்றுக்கிழமை 13-10-2024 அன்று கிராமத்து வதனம் தமிழ் பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஆசிரியர் குழுவினரால் வெளியிடப்படும் காலாண்டுச் சஞ்சிகையான வதனம் இதழின் 'கனடாச் சிறப்பிதழ்' ரொறன்ரோ 925 அல்பியன் வீதியில் உள்ள சமூகமையத்தில் வெளியிட்டு வைக்கப் பெற்றது.

'பெண்கள், மற்றும் இளைய தலைமுறையினர் எழுதும் சமையற் குறிப்புகள், எமது பாரம்பரிய விளையாட்டுகள், உணவு வகைகள், பயணக்கட்டுரைகள், தாங்கள் பிறந்த மண் பற்றிய ஆக்கங்கள், கவிதைகள், சிறுகதைகள் மற்றும் தாயகம், கனடா பற்றிய செய்திகள் போன்றவை மிகவும் பயனுள்ளதாகவும், இங்குள்ள இளைய தலைமுறையினர் அவற்றை அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருப்பதால், வதனம் இதழ் சிறந்த தொரு இலக்கியப் பத்திரிகையாகக் கனடாவில் வெளிவருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. புலம் பெயர்ந்த மண்ணில் எங்கள் மொழியையும், பண்பாட்டையும் தக்க வைப்பதற்கு உதவியாகவும், சிறப்பாகவும் வெளிவரும் இந்த 'வதனம்' இலக்கிய மஞ்சரி தொடர்ந்தும் நூல் வடிவில் எமக்கு வாசிக்கக் கூடியதாகக் கிடைப்பது எமது அதிஸ்டமே' என்று திருமதி நாகேஸ்வரி சிறிகுமரகுரு அவர்கள் கனடாச் சிறப்பிதழின் அறிமுக உரையில் குறிப்பிட்டார்.

தமிழும் சைவமும் இரு கண்கள் என்பதால், இந்த நிகழ்வின் போது இன்றைய இளைய தலைமுறையினரின் தேவை கருதி 'பக்தி இலக்கியத் தூறல்' என்ற கைநூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. சிறுவர்கள் மற்றும் இளைய தலைமுறையினருக்கு இந்த நூல் இலவசமாகக் கொடுக்கப்பட்டது. இந்த நூலில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒளவையாரின் விநாயகர் வணக்கம், சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ், சேக்கிழரின் பெரியபுராணம், கச்சியப்பரின் கந்தபுராணம், மாணிக்கவாசகரின் திருவாசகம், பாரதியார் பாடல், விபுலானந்தர் பாடல், சரசுவதி அந்தாதி, அபிராமி அந்தாதி, திருக்கோணேசுவர, திருக்கேதீசுவரப் பதிகம் ஆகியன இடம் பெற்றிருக்கின்றன.

'பெண்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும் ஊடகத்துறையில் பயிற்சி அளிப்பதற்காக வதனம் இதழை வெளியிடுகின்றோம். 'பக்தி இலக்கியத் தூறலில்' உள்ள தேவாரங்களைப் பாடமாக்கி தைப்பொங்கல் போட்டியில் கலந்து கொள்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்' என்று வதனம் நிர்வாக ஆசிரியர் கமலவதனா சுந்தா அவர்கள் தனது உரையில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வதனம் இதழின் பிரதம ஆசிரியரான பிரபல எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களை, அவரது தமிழ் இலக்கியப் பணியைப் பாராட்டி வதனம் இதழ் இணை ஆசிரியர்களான இளைய தலைமுறையினர் கௌரவித்திருந்தனர். அவர் தனது உரையில் 'இளைய தலைமுறையினர் மிகுந்த ஆர்வத்தோடு ஊடகத்துறையில் ஈடுபடுவதையிட்டு மகிழ்ச்சியாக இருக்கின்றது. சிறுகதைப்பட்டறைப் பயிற்சி வகுப்புகளை நடத்தும்படி கேட்டிருந்தார்கள். அதை முன்னெடுத்ததன் விளைவாக அதில் பங்குபற்றிய ஆறு பேர் இதுவரை சிறுகதைகளை எழுதித் தந்திருக்கிறார்கள். ஏனையோரும் எழுதி முடித்ததும் ஒரு நூலாக வெளியிட்டுக் கனடிய தமிழ் பெண்களின் சிறுகதைத் தொகுப்பாகக் கனடியத் தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்ப்போம்' என்று குறிப்பிட்டிருந்தார்.

(கடந்த இதழின் தொடர்ச்சி)

* சந்தை விரிவாக்கம் பற்றிய விளக்கமும் அதன் தேவை பற்றிய ஆய்வுத்திறனும் இங்கு மிகவும் குறைபாடாக இருக்கிறது..

* புதிய வெளியீட்டுத் தளங்களின் வெளியீட்டுக்கான கிடைப்பனவு ஈழத்துப் படைப்புகளுக்கு இல்லாமல் அல்லது மிகக்குறைவாக இருப்பதும் அதுபற்றிய தெளிவு படைப்பாளர்களுக்கு போதுமானதாக இல்லாமல் இருப்பதும், இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு யாரும் முன்வராதைமையும், புதிய

வெளியீட்டுத் தள உருவாக்கத்திற்கான முயற்சியில் யாரும் ஈடுபடுவதில் முனைப்புக்காட்டாதமையும் இன்னொரு காரணமாக பார்க்கலாம்.

* எமது தாயக திரைப்படங்களில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்கள் முன்வராமை. இங்கு முதலிடுவதற்கு தயங்கும் முதலீட்டாளர்கள் வர்த்தக ரீதியான இலாபத்தை இலக்காகக்கொண்டு அயலகத் திரைப்படங்களில் முதலீடு செய்வதில் மட்டும் அதிக அக்கறை செலுத்துகின்றமை.

* தாயகத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அநேகமான ஊடகங்கள் எமது படைப்பாளர்களை ஊக்குவிப்பதை தவிர்ப்பதோடு மட்டுமல்லாது தமது ஊடகங்களில் வெளியிடப்படும் தொலைக்காட்சித் தொடர்கள், திரைப்படங்கள், மற்றும் ஏனைய சில நிகழ்வுகளை அயல் நாட்டில் அதிக விலை கொடுத்து பெற்று தமது ஊடகங்களில் வெளியிடுகின்றமை.

* தயாரிப்பாளர்கள் அல்லது இயக்குனர்களின் தயாரிப்புக்கு முந்திய மற்றும் தயாரிப்புக்கு பிந்திய கவனத்தில் எடுக்கப்படவேண்டிய பல விடயங்கள் பற்றிய கவனக்குறைவு, தெளிவின்மை மற்றும் அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்காமை.

* படைப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் மற்றும் இயக்குனர்கள் தற்போதைய இரசிகர்கள் குழாமின் இரசனை, எதிர்பார்ப்பு, ஆர்வம் மற்றும் விருப்பம் போன்றவற்றை முழுமையாக அறிந்து கொள்ளாமல் அல்லது அவை பற்றிய அக்கறையில்லாமல் தங்கள் படைப்புகளை உருவாக்குவது. இந்திய மற்றும் மேற்குலக நாடுகள் தமது சினிமாப் படைப்புகளை நவீன காலத்தைய எதிர் பார்ப்புகளுக்கமைவாக மாற்றிக்கொண்டதோடு அதி நவீன தொழில் நுட்பங்களை இரசிகர்களை ஈர்க்கும் நோக்கோடு பயன்படுத்தி தமது படைப்புகளை படைத்து

> ‘சர்வதேச தரத்திலான தரமான படைப்புகளை தயாரித்து வெளியிட்டால் கட்டாயமாக ஈழத்து தமிழ் திரைப்படங்கள் வர்த்தக ரீதியில் வெற்றி பெறும்’
>
> - ஆனந்த ரமணன் -

வெளியிடுகின்றனர். பாகுபலி, அவதார், ஜுரசிஸ் பார்க் போன்ற பல படங்களை இதற்கு உதாரணமாக பார்க்கலாம். அந்த சிந்தனையை நாம் இன்னமும் கவனத்தில் எடுக்காதிருக்கிறோம்.

* தாயகத்தின் தமிழ்த் திரைப்பட வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய மற்றும் தரமான படைப்புக்களை

வெளிக்கொண்டு வருவதற்குரியதான ஊக்குவிப்பிலும் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதிலும் அரசாங்கம் தனது கவனத்தை செலுத்தாமையும் தனது ஆதரவை ஏற்புடையதான வகையில் வழங்காமையும் இதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமையும்..

* இலங்கையின் மொத்த சனத் தொகை 22 மில்லியன் அதில் தமிழ் பேசும் மக்கள் 2.2 மில்லியன் முஸ்லிம் மக்கள் 1.7 மில்லியன். முஸ்லிம் மக்களும் தமிழ் பேசுபவர்கள் என்ற அடிப்படையில் பார்த்தால் மொத்தமாக 3.9 மில்லியன் மக்கள் தமிழ் பேசுபவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் 25 வீதமானவர்கள் படம் பார்ப்பதை பொழுதுபோக்காக கொண்டவர்கள் என்று எடுத்துக்கொண்டால் 975,000 மக்கள் உள்ளனர் என்று எடுத்துக்கொள்ளலாம். இவர்கள் அனேகமாக இந்திய சினிமாவை பார்ப்பதையே பழக்கமாகக்கொண்டவர்கள். இவர்களுள் ஆங்கிலத் திரைப்படங்களை விரும்பிப் பார்ப்பவர்களும் உள்ளனர். ஈழத்தில் வெளிவரும் தமிழ்த் திரைப்படங்களை மிகச் சொற்ப அளவிலானவர்களே பார்வையிடுகின்றார்கள். ஒரு 10 வீதமானவர்கள் ஈழத் தமிழ்த் திரைப்படங்களை பார்ப்பவர்கள் என்று ஊகித்தால் மொத்தமாக 97,500 தனி நபர்களே உள்ளனர். எமது திரைப்படங்களை பார்த்தவர்களின் எண்ணிக்கையை சரியான முறையில் ஆய்வு செய்து பார்த்தால் இதை விட மிகச் சொற்ப அளவிலேயே இருப்பர். அதனை இதுவரை யாரும் ஆய்வு செய்து பார்க்கவில்லை. ஆய்ந்து பார்க்கவேண்டிய கட்டாய தேவை இருக்கிறது. என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்போதுதான் உண்மையான சந்தை கேள்வி என்ன என்பதை கண்டறிய முடியும். அதேவேளை இந்த எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை கண்டறியவும் முடியும். மேலே குறிப்பிட்ட இந்த தொகையினர் அனைவரும் எமது திபைப்படங்களை பார்த்தால் அனுமதிச் சீட்டின் விலை உரூபா 400 என்று எடுத்துக்கொண்டால் மொத்தம் உரூபா 39,000,000களுக்கே மொத்த விற்பனை இடம்பெறும்.

ஒரு திரைப்படத்தை எடுப்பதற்கு இந்திய வெளியீட்டாளர்கள் இந்திய உரூபாயில் 10 கோடியில் இருந்து 300 கோடிகள்வரை செலவு செய்கிறார்கள்(இந்த தொகை இலங்கை உரூபாயில் 3.4 மடங்கு அதிகமாக இருக்கும்). நமது படைப்பாளர்கள் முடிந்தவரை முயற்சி செய்து இலங்கை உரூபாயில் 3 கோடிகளுக்குள்தான் செலவு செய்து படம் எடுக்கிறார்கள். ஆகவே மேலே குறிப்பிட்ட வருமானம் மட்டும்தான் முழுமையாக கிடைக்குமாக இருந்தால் இவர்களால் எப்படி வெளியீட்டாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள் போன்ற அனைவரது இலாபப் பங்கையும் கணிப்பிட்டு தங்கள் இலாபத்தையும் கணிப்பிட்டு வர்த்தக ரீதியில் வெற்றிபெற்ற திரைப்படமாக எப்படி எடுக்க முடியும். இதே வேளை நடைமுறையில் இதுவரை வெளிவந்த நமது திரைப்படங்களை பார்த்தவர்களின் எண்ணிக்கையை ஒரு ஊகிப்பில் மாவட்டத்திற்கு 1000 நபர்கள் என்று பார்த்தால் 25 மாவட்டங்களையும் சேர்த்து 25000 நபர்கள் பார்வையிட்டிருப்பார்கள். இந்த தொகை கூடலாம் குறையலாம் சராசரியாக என்ற ஊகிப்பில் இந்த கணிப்பீட்டை செய்திருக்கிறேன் அப்படியென்றால் மேலே நான் குறிப்பிட்ட தொகையைவிடவும் மிகக்குறைந்தளவு வருமானமே கிடைக்கும். இந்த நிலைமைதான் தொடரும் என்ற நிலைமை இருந்தால் ஒருபோதும் இலங்கையில் தமிழ் திரைப்படங்கள் வார்த்தக ரீதியில் வெற்றிபெறாது என்ற ஊகிப்புக்கு நாம் வரலாம். ஆகவே நாம் இந்த நிலையில் இருந்து வர்த்தக ரீதியில் வெற்றிபெறுவதற்கான மாற்றுத் தீர்வுகளை ஆராய வேண்டும்.

காதல் பறவையாய்

நேச வானிலே
நீயும் நானுமே
வீசும் காற்றிலும்
வாசம் வீசினோம்
காதல் பூத்தது
கண்கள் சந்திக்க
கானம் இசைத்தது
களிப்புற்ற இதயம்
இருவிழி நோக்கினாய்
இதயத்தை இழந்தேன்
புன்னகை உதிர
என்னையும் தொலைத்தேன்
உள்ளம் நிறைத்தாய்
உணர்விலும் ஒன்றினாய்
வலிகளில் தோள்தந்தாய்
வாழ்விலே பாதியாய்
இணையாக இணைந்தவளே
எழுதுகின்றேன் காதல்வரி
துணையாக வந்தேயெனைத்
தூணாக நிறுத்தினாய்
ஏழேழு பிறவிகள்
எடுத்தாலும் பிரியேன்
இன்னமும் அதிகமாய்க்
காதல் புரிவேனே

— தங்கமலர் வடிவேல் —

காதலின் வீதியில்...

காதலின் தேன்துளி கனிந்து
கொட்ட
மாதவள் சாய்ந்தனள் மன்னவன்
மார்பினில்
உலகத்தின் இன்பமெல்லாம்
உணர்வில் கலந்திட
புலர்ந்த பொழுதினில் பூவையவள்
புன்னகைக்க
வள்ளுவ வரிகள் வனிதையில்
வனப்பிடத்
தெள்ளு தமிழும் தெம்மாங்கு
பாடிட
இலக்கிங்கள் பேசும் இனிய
காதலிங்கே
உலவியே மகிழும் உயிர்கள்
இரண்டில்
கண்ணுங் கண்ணும் காமுற்றே
ஓர்மமாய்
எண்ணத்தில் கலந்து எத்திக்கும்
ஒன்றாக
ககனங் கடந்துங் கனிரசச்
சுவையொடு
சுகந்தம் வீசிச் சொக்கிநிற்பர்
அணைப்பிலே.

— உடுவிலூர்க்கலா —

காதல் கல்யாணம்

பாராமல் பிரிந்திருந்தாலும்
பத்திரமாய் மனசுக்குள்
பேசும் பாச உள்ளங்கள்
ஓராயிரம் இங்கே
நூலிழை ஆணவத்தால்
போலியாகப் பிரிந்து
வாழ் நாளில் பூசிக் கொள்வது
"தான்" எனும் சகதி மட்டுமே
புரிதல்கள் இல்லாது
பிரிவதால் உறவுகள்-வேறு
பரிமாணங்களில்
புதிதாய் பிறக்கிறது
கண் நிறைகளை மட்டுமே
"கன்னிக்காதல் " காணும்
காட்சிக் குறைகளுடன்
ஆட்சி செய்யும் காதலுமுண்டு
கல்யாணத்திற்குப் பின்
குறைகள் தெரியும் தெளிவாக
காதல் ஒரு தொலை நோக்கி
கல்யாணம் நுண்ணோக்கி
நான் பேசுவது தேன்
நீ பேசுவது வீண்
இப்படியாகப் பிரிவுகள்
இதழ்களின் அதிர்வுகளில்
நமக்குள் மாற்றங்கள்
நடக்கும் போது
பழைய பிரிவு இறக்கிறது
புதிய உறவு பிறக்கிறது

- அனுராதா சௌரிராஜன் –

ஓவியத் தாயும் ஒருதுளி நீரும்

ஓவியத் தாயும்
ஒருதுளி நீரும்..!
ஓங்கி உரைக்கிறதே
பெண்மையின் பெருமையையும்..!

ஓடிவந்த மதலையும்
முயலுதே துடைத்திட...!
ஓயாத கவலையின்
அடையாளத்தைத் துரத்திட..!

ஓராயிரம் சொல்கிறதே
ஒப்பிலாக் காவியமிது..!
தாய்மையின் தகைமையதைத்
தக்கபடி இயம்பிடவே..!

தாய்மொழியிலும் சிறப்பாகச்
சொல்லிடச் சொற்களில்லை..!
வாய்மொழியாய்ப் பாடிடவும்
வாகாய்க் கற்கவில்லை..!

மெய்யுணர்வால் வடித்திட்ட
மேன்மைச் சித்திரம்..!
சேய்களுக்கும் புரிந்திடும்
சீர்மிகு விசித்திரம்..!!

– தி ஸ்ரீராமன் –

~ குரு அரவிந்தன் ~

இம்முறை நடந்த சென்னை புத்தகத் திருவிழாவில் இலங்கைத் தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரின் நூல்கள் இடம் பெற்றிருந்ததாகத் தமிழக நண்பரும், கவிஞருமான மு.முருகேசு அவர்கள் அறிவித்திருந்தார்கள். அகணி பதிப்பகத்தின உரிமையாளரான அவரது பதிப்பகத்தின் நூல்களும் அங்கே தனியாக ஒரு காட்சியறையில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த காட்சியறையில் எனது 7 சிறுகதைத் தொகுப்புகளும், 7 புதினங்களும் அவரால் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. இதைவிட 22 தமிழக பிரபல எழுத்தாளர்கள் எழுதிய எனது நூல்கள் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் அடங்கிய **'மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்'** என்ற நூலையும் காட்சிப்படுத்தியிருந்தார். கல்லூரி மணவ, மாணவிகள் மற்றும் நடுத்தர வயதினர் பலர் எனது புத்தகங்களைத் தேடி வாங்கிச் சென்றதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

சென்னை புத்தகத் திருவிழா தமிழ்நாடு புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பில் 27-12-2024 தொடக்கம் 12-1-2025 ஞாயிற்றுக்கிழமை வரை நந்தனத்தில் நடைபெற்றது. சென்ற வருடம் 20 லட்சம் வாசகர்கள் வருகை தந்ததாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. வாசலில் திருவள்ளுவர், மகாத்மாகாந்தி, மற்றும் திரு.வி.கா ஆகியோரின் உருவச்சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. சுமார் 900 அரங்குகள் வரை இங்கே இடம் பெற்றிருந்தன.

புத்தகக் காட்சி இடங்களை ஒன்பது பாதைகள் இணைத்தன. காட்சி அறைகள் இருந்த பாதைகளுக்கு பாரதியார் பாதை, பாரதிதாசன் பாதை, கம்பர் பாதை, வள்ளுவர் பாதை, இளங்கோ பாதை, ஔவையார் பாதை, வா.உ.சி. பாதை, கலைஞர் பாதை, வள்ளலார் பாதை என்று பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. **'யாவரும் பப்பிளிகேஸன்ஸ்'** என்று இளையோர்களுக்கான நூல்கள் விற்பனையகமும் தனியாக இருந்தது. இதைவிட குழந்தைகள் சிறுவர்களுக்கான காட்சிச் சாலைகளும் இருந்தன. இம்முறை சில ஆங்கில நூல் பதிப்பகங்களும் தங்கள் நூல்களைக் காட்சிப் படுத்தியிருந்தனர்.

சென்ற வருடம் கனடா தமிழ் எழுத்தாளர் இணையமும் இது போன்று **'நூல்களின் சங்கமம்'** என்ற பெயரில் ஒரு புத்தகக் கண்காட்சியைக் கனடாவில் வெற்றிகரமாக நடத்தியிருந்தனர். கனடாவில் உள்ள எழுத்தாளர்கள் தங்கள் நூல்களைக் காட்சிப் படுத்தவும், வாசகர்களைச் சந்திக்கவும் இது ஒரு பாலமாக அமைந்திருந்தது. எதிர்பார்த்ததைவிட பார்வையாளர்கள் அதிக அளவில் வந்திருந்தனர். குறிப்பாகப் பெற்றோர் இளைய தலைமுறையினரை கண்காட்சிக்கு அழைத்து வந்து தமிழ் நூல்களை வாங்கிச் சென்றது குறிப்பிடத் தக்கது. சிறுவர்களுக்கான எனது புத்தகங்கள் பல அப்போது விற்பனையாகியிருந்தன. இளையோரின் தமிழ் சார்ந்த பேச்சுக்கள், மற்றும் கலை நிகழ்ச்சிகளும் அப்போது நூல்களின் சங்கமத்தில் இடம் பெற்றிருந்தன.

(மேலே உள்ள புகைப்படம் செயற்கை நுண்ணறிவின் துணையோடு எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது)

சந்திரனில் 'நீலப்பிசாசு' என்று சமீபத்தில் ஊடகங்களில் வெளிவந்த செய்தியை வாசித்த போது, பலரும் பதட்டப்பட்டார்கள். மனிதர்களைச் சந்திரனில் குடியேற்ற அமெரிக்கா முயற்சி செய்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அங்கு பிசாசு குடிகொண்டிருக்கிறதா என்ற பயமும் ஒருபக்கம் எழுந்தது. இது உண்மையா, சந்திரனில் பிசாசு இருக்கிறதா? என்றெல்லாம் கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். எட்டாம் வகுப்பில் என்னிடம் கல்வி கற்கும் சில மாணவர்களுக்கும் இந்த சந்தேகம் இருந்ததால், இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தனர். மேலை நாட்டவருக்கும் இந்தப் பேய், பிசாசுகளில் நம்பிக்கை இருப்பதால்தான், கலோவீன் தினத்தைப் பிரமாண்டமாக இங்கே கொண்டாடுகின்றார்கள். சின்னப் பிசாசா அல்லது பெரிய பிசாசா? எப்படி இந்த நீலப்பிசாசு சந்திரனுக்கு வந்தது?

அறிவியல் சார்ந்த செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளா விட்டால், இது போன்ற சந்தேகங்கள் வரத்தான் செய்யும். நிலா என்று சொல்லப்படுகின்ற சந்திரனில் 'ப்ளூ கோஸ்ட்' என்று சொல்லப்படுகின்ற நீலப்பிசாசு இருப்பது உண்மைதான். உங்களுக்கும் இது ஆச்சரியமாக இருக்கும், ஆனால் எங்கள் பூமியில் இருந்துதான் அந்த நீலப்பிசாசு அங்கு சென்றதற்கான சான்றுகள் இருக்கின்றன. ஆமாம், சந்திரனில் மனிதன் ஏற்கனவே தரை இறங்கி இருந்தாலும், தரை இறங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சென்ற ஜனவரி மாதம் 15 ஆம் திகதி 2025 அன்று நிலாவை நோக்கித் தரைஇறங்கியான இந்த 'ப்ளூ கோஸ்ட்' என்று சொல்லப்படுகின்ற நீலப்பிசாசு அமெரிக்காவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டது. அது மார்ச் மாதம் 2 ஆம் திகதி வெற்றிகரமாகச் சந்திரனில் தரை இறங்கி இருந்தது.

நிலாவில் தரை இறங்குவது என்பது எவ்வளவு கடினமானது என்பது அனேகருக்குத் தெரியாமல் இருக்கலாம், காரணம் அங்கு ஈர்ப்பு விசை குறைவாக இருப்பதாலும், தரை இறங்குவதற்குத் தேவையான சரியான இடத்தைத் தேர்ந்தெடுப்பதும் மிகக் கடினமானதாகும். சந்திரத்தரை சிறிய குன்றுகளையும், குழிகளையும் கொண்டதாக இருப்பதால், பூமியில் இருந்து சரியான இடத்தைத் தெரிவு செய்வது கடினமாகும். இதுவரை சுமார் 143 விண்கலங்கள் பூமியில் இருந்து சந்திரனுக்கு அனுப்பப்பட்டாலும், அவற்றில் 27 விண்கலங்கள் மட்டும் தான் வெற்றிகரமாகச் சந்திரனில் தரை இறங்கியிருக்கின்றன. பாதுகாப்பாக நிலாவில் தரை இறங்கிய ரோபோக்களில் இந்த நீலப்பிசாசும் ஒன்றாகும். மத்திய அமெரிக்காவில் உள்ள ஒரு வகை மின்மினிப் பூச்சிகளுக்கும் 'ப்ளூ கோஸ்ட்' என்ற பெயர் இருப்பதால், அந்தப் பெயரைத்தான் இந்தத் தரை இறங்கிக்குச் சூட்டியிருந்தார்கள்.

இதுவரை வெற்றிகரமாகச் சந்திரனில் ரோபோட்டிக் விண்கலங்களைத் தரை இறக்கிய நாடுகளில் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, சீனா, இந்தியா, யப்பான் ஆகிய ஐந்து நாடுகள் இந்த சாதனையைப் படைத்திருக்கின்றன. அமெரிக்கா மட்டும்தான் மனிதர்களைச் சந்திரனில் இதுவரை வெற்றிகரமாகத் தரை இறக்கியிருக்கின்றது. சந்திரனுக்கான இந்தத் திட்டம் வெற்றி அடைந்தால், அடுத்து மனிதர்களை அங்கு தரை இறக்கி, விண்வெளி நிலையத்தில் குடியிருப்பது போல, சந்திரக் குடியிருப்புக்குத் தயாராகுகின்றார்கள். இதைத் தொடர்ந்து செவ்வாய் கிரகம் நோக்கிய பயணம் வெகு விரைவில் ஆரம்பமாகலாம்.

கரிசல் மண்ணில் ஒரு காவியம்

தொடர் நவீனம்

அத்தியாயம்--1

பள்ளிப் பருவம் துள்ளித் திரிந்த காலம்,பள்ளி முடிந்து வந்தததும் அவளும் நானும்தான் விளையாடுவோம்.எங்களுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டே அப்பா அம்மா விளையாட்டுத்தான்.அப்போதே அதன் அர்த்தங்கள் புரிந்துதான் இருந்தது. ஆனாலும் அதை விளையாட்டாகத்தான் விளையாடினோம். ஓடிப்பிடிப்போம் கட்டித்தழுவுவோம். ஆனாலும் அப்போது ஆணென்ன பெண்ணென்ன பால் வேற்றுமை புரியவில்லை.

வேறு யாரையும் விளையாட்டுக்குச் சேர்ப்பது இல்லை.வேறு யாரும் எங்களையும் சேர்ப்பது இல்லை. ஏனெனில் எனக்காக அவளும் அவளுக்காக நானும் எவரிடமும் விட்டுக் கொடுப்பது இல்லை.

பக்கத்துப் பக்கத்து வீடு. நானும் என் அம்மாவும்தான். என் அம்மா விடிந்து வேலைக்குப் போனால் அடைந்துதான் வீடு திரும்புவாள். தினமும் கம்மஞ் சோறுதான். பச்சை மிளகாயை கடித்துக் கொண்டு கஞ்சியாய்க் கரைத்துக்

குடித்தால் அவ்வளவு ருசியாக இருக்கும். என் ஏழ்மை புரிந்து கொண்ட அவள் எனக்காக தேங்காய் துவையல் அரைத்து எடுத்துக் கொண்டு வந்து தருவாள்.

“ஏன் கரைத்துக் குடிக்கிறாய் துவையல் தொட்டுச்சாப்பிட வேண்டியதுதானே”

கொ.பெ.பி.அய்யா.

எனச்செல்லமாகக் கூறி நான் சாப்பிடுவதை பரிதாபமாக் பார்த்துக் கொண்டே இருப்பாள். அவள் ஓரளவுக்கு வசதியானவள்தான். அவள் வீட்டில் தினமும் நெல்லுச்சோறு காலை மாலை இட்லி தோசைதான். என் வீட்டில் தீபாவளி பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில்தான் தோசை, இட்லி. நெல்லுச்சோறு எல்லாம்.. அதனால் நான் சாப்பிடும் இந்தக் கம்மஞ் சோறு அவளுக்கு ஆசையாக இருக்கும்போலும்.

“டேய் எனக்கும் கொஞ்சம் தாயேண்டா”

எனக் கேட்பாள். நானும் மறுக்காமல்

“இந்தா நீயும் கொஞ்சம் குடி”

என்று ஒரு அலுமினியத் தம்ளரில் ஊற்றிக் கொடுப்பேன். அப்போது அவள் ரசித்துக் குடிப்பதை பார்த்து நான் ஆனந்தம் அடைவேன்.

அவள் வீட்டில் என்ன பலகாரம் செய்தாலும் எனக்குக் கொடுக்காமல் அவள் சாப்பிட மாட்டாள்.அவளுடைய அம்மா நல்லவர்தான். அவளுடைய ஆச்சிதான் சிடுமூஞ்சி. என்னோடு அவள் சேர்ந்து விளையாடுவதைக் கண்டாலே அவளுடைய ஆச்சி முனுமுனுப்பாள். பள்ளிக்குப் போனாலும் வந்தாலும் சேர்ந்தே போவோம் சேர்ந்தே வருவோம். அதைக்கண்டு எங்கள் வயதிலுள்ளவர்கள் எங்களைப் பார்த்து புருசன் பொண்டாட்டி எனவும் கேலி பேசுவார்கள்.

அதையெல்லாம் நாங்கள் கண்டு கொள்வதும் இல்லை. சில நேரங்களில் கேலி கிண்டல் அதிகமாகும்போது அவள் அழுவாள். அப்போது சக மாணவர்களோடு நான் சண்டை கட்டுவதும் உண்டு. அடிபடுவதும் உண்டு. ஆனால் அந்த அடியும் வலியும் அவள் தடவிக்கொடுக்கும் பொழுது காணாமல் போய்விடும். ஒரு நாள் ஆசிரியர் நான் வீட்டுப்பாடம் எழுதவில்லை என்று என்னை அடித்து விட்டார். அந்த வலியை நான் தாங்கிக் கொண்டேன். ஆனால் அவளால் என்வலியை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அப்படியொரு இனம் புரியாத பாசம்.

தினமும் இரவுப் பாடம் படிக்க அவளுடைய வீட்டுக்குத்தான் பையை தோளில் போட்டுக்கொண்டு போவேன். என் பாடங்களை எல்லாம் அவள்தான் எழுதிக்கொடுப்பாள். அந்த நாளில் மின்சாரம் என்றால் நகரங்களில்தான் காணமுடியும். கிராமங்களில் மண்ணெண்ணை விளக்குத்தான். ஒரு விளக்கைக் கொளுத்தி வைத்துக்கொண்டு அதைச்சுற்றி வட்டமாக உட்கார்ந்துகொண்டு படிப்போம். போதாத வெளிச்சம்தான். குனிந்துகொண்டு மிகவும் உற்றுக்கவனிதுதான் பாடங்களைப் படிக்கவேண்டும். தெருவிளக்குகள் நிலாக் காலம் மட்டும்தான். மற்ற நாட்களில் வான் நட்சத்திரங்கள் மட்டுமே மங்கலான ஓரளவுக்கு உருவம் புரியும் அளவுக்கு மெல்லிய இருளாக இருக்கும். எனக்கு இருள் என்றால் அப்போதே பயம். அதனால் அவள்தான் என்னை வீடுவரை துணைக்கு வந்து உதவுவாள்.

வழக்கம்போல் பள்ளிக்குப் புறப்பட்டு தோளில் புத்தகப்பையை தூக்கிப் போட்டுக்கொண்டு அவள் எனக்காகக் காத்திருப்பாள் என அவசர அவசரமாக வீட்டைவிட்டு வந்தேன். எனக்குப் பள்ளிக்குச்செல்ல வேண்டுமே என்ற அக்கறையைவிட அவளோடு சேர்ந்து போவதில்தான் என்னையும் அறியாமல் எனக்குள் இருந்த துடிப்பு. இது எனக்கு அப்போது புரியவில்லை. இப்போது அதை எண்ணிப்பார்க்கும்போது அது பாலியல் ஈர்ப்புதான் எனப்புரிகிறது. எனக்கு ஆண் மாணவ நண்பர்களே இல்லை. அதை நான் விரும்பவும் இல்லை .

எனக்கு எல்லாமே அவள்தான் எனும் ஒரு பற்று.. அவளைக்காணாமல் என்னால் தனியே பொழுதைத் தள்ள இயலாது எனும்நிலை. அவள் ஒரு நாள் ஊரில் இல்லை என்றால்கூட அவள் வீட்டின் முன்பாக உள்ள அந்த முருங்கை மரத்தைப் பிடித்துக்கொண்டு அவளோடு அதைச்சுற்றிச்சுற்றி அவளோடு விளையாடுவதுபோல் விளையாடிக்கொண்டு அவள் வீட்டு வாசலிலேயே கிடப்பேன். இப்படியொரு பந்தம் எப்படி என நான் சிந்திக்கவும் பக்குவப்படவில்லை. அப்படியொரு முயற்சி எனக்குள் தோன்றவும் இல்லை. அது எல்லாமே அனிச்சைச் செயலாகத்தான் இருந்துள்ளது.

பள்ளிக்குச்செல்வதற்காக வேகமாக அவளைத் தேடிக்கொண்டு அவள் வீட்டுக்குள் அவள் பெயரைச்சொல்லி அழைத் துக்கொண்டு நுழைய முயன்றேன். அவளுடைய ஆச்சி வாசலில் நின்றுகொண்டு

“டேய் எங்கடா போற “என அவசரமாகத் தடுத்து---

“அவள் இனிமேல் உன்னோடு வரமாட்டாள், நீ போடா” என என்னை விரட்டுவதுபோல் அதட்டினாள்.

நானும் புரியாதவனாய்

“ஏன் ஆச்சி அவளுக்கு காய்ச்சலா” என வினவினேன்.

அதற்கு ஆச்சி –

“ஆமாம் அப்படித்தான்.....நீ போடா!” என என்னை விரட்டிவிடுவதிலேயே குறியாக இருந்தாள்!

அதற்குள் என் அம்மா பின்னாலயே வேகமாக வந்து

“டேய் ராசா அவள் வரமாட்டாள். இன்னுமே நீ மட்டுந்தான் தனியா பள்ளிக்கூடம் போகணும்.”

எனக்கூறி என் கையைப் பிடித்து இழுத்து அழைத்துப்போனாள் .

நானும் விடவில்லை மாறி மாறி என் அம்மாவிடம் கேட்டேன்

“ஏம்மா......ஏம்மா வரமாட்டாள் ,அவளுக்கு என்னம்மா,.....சொல்லும்மா .....சொல்லும்மா”

புரிந்து கொள்ளாத வயதில் அம்மா என்ன சொல்லுவாள்.!

“டேய் ,,நீ.. சின்னப் பையன், உனக்கு இதெல்லாம் புரியாது. சொன்னாக் கேளு !

அம்மா சொல்ரேன்ல்ல. “நீ மட்டும் போ ராசா” என என்னைச்சமாதானபடுத்தி அனுப்பிவைத்தாள்

அப்புறம் அவள் என்னைப் பார்ப்பதும் இல்லை பேசுவதும் இல்லை. எப்படி என்னை மறந்தாளோ நினைந்தாளோ தெரியவில்லை.

(தொடரும்.)

படித்ததில் பிடித்தது

எழுதியவர் பேர் தெரியல.... சிரிச்சு சிரிச்சு வயிறு வலிக்குது

அண்மையில் முகப்புத்தகத்தில் தனு என்பவர் பதிந்திருந்த பதிவை உங்களுடனும் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி

கொலைப் பசியோடு ஒரு திருமண வரவேற்பு பந்தியில் அமர்ந்திருந்தேன்.

முதலில் பேப்பர் ரோலை உருட்டினார்கள் . பின்பு இலைகளை முன்னே வைத்து சென்றார்கள்.

கால் மணி நேரத்திற்கு பிறகு தண்ணீர் மட்டும் வைத்தார்கள்.

முதல் பந்தியே ஆரம்பிக்கவில்லை அதற்குள் தி.நகர் போன்று கூட்டம் நெறிய ஆரம்பித்தது.

நான் ஓர வரிசையில் அமர்ந்திருந்தேன். காத்திருப்பவர்கள் எனக்கு பின்னால் வந்து நிற்க ஆரம்பித்தார்கள்

" வெறும் எலைய எம்மா நேரம்டா உத்து பாக்கறது .. சோத்த போடுங்கடா.."சரக்கிலிருந்த பெருசு ஒன்று ஆரம்பித்து வைத்தது .

குலாப் ஜாமூன் , வெங்காய பச்சடி , உருளை சிப்ஸ் , வைத்த அடுத்த நொடியில் கபளீகரம் செய்தேன்.

என்னுடைய வரிசையில் கடைசி ஆள் வரை வைத்துவிட்டு திரும்பிய வெங்காய பச்சடிக்காரன் என்னைப் பார்த்து " பச்சடியைக் கூடவாடா ..?" என்று மனதில் நினைத்தது அவன் முகத்தில் தெரிந்தது.

அடுத்தது சென்னாவும் , தேங்காய் சட்னியும் , வைத்தார்கள் .

" எப்பதாண்டா சோறு போடுவீங்க ..? " மறுபடி பெருசு உருமியது.

" சார் தோசையும் சப்பாத்தியும் வந்துட்டே இருக்கு .. அது வரைக்கும் அப்பளம் சாப்ட்ரீங்களா ..?"

அப்பளம் வைத்திருந்தவன் நக்கல் செய்கிறானா , இல்லை மனதில் இருந்துதான் கேட்கிறானா போன்ற ஆராய்ச்சிகளில் இறங்க என் பசி அனுமதிக்கவில்லை.

இதோ வருகிறது அதோ வருகிறது என்று அவர்கள் ஆட்டம் காட்டிக் கொண்டிருந்த சப்பாத்தியும் தோசையும் வந்தே விட்டது .

படுபாவிகள், எதிர் வரிசையில் வைக்க ஆரம்பித்தனர்.

எனது இடத்திற்கு வரும்பொழுது தோசை தீர்ந்துவிட்டது.

ஒரே ஒரு சப்பாத்தி வைத்தான்.

" தம்பி தோசை வரல .."

" நான் சப்பாத்தி வைக்கிற ஆளு சார் .."

" தெரியுதுப்பா . அவர்கிட்ட சொல்ல முடியாதா ..?"

" உள்ள இருப்பான் சார் .. போனதும் சொல்றேன் .."

அவர் மீட்டிங்கில் இருக்கார் இப்போ பார்க்க முடியாது என்று என் காதில் விழுந்தது .

அதற்குள் சாப்பாடு வைக்க ஆரம்பித்தார்கள்.

" பாஸ் ஒரு கரண்டி வைங்க சாப்டுட்டு பொறவு வாங்கிக்கிறேன் " எனக்கு இலையில் டிராபிக் ஜாம் ஆனால் பிடிக்காது என்பதால் அப்படி சொன்னேன்.

" தம்பி அதெல்லாம் வேலைக்கு ஆகாது இப்பவே மொத்தமா வாங்கிக்கங்க ..

அப்புறம் இவங்கள பிடிக்க முடியாது ..” பக்கத்தில் இருந்த அனுபவஸ்தர் கூறினார்.

அவர் கூறியபடியே மொத்தமாக வாங்கி , சாம்பார் , வத்தக்குழம்பு , ரசம் , மோருக்கு என நான்கு பாகங்களாக பிரித்து வைத்தேன்.

எனக்கு பின்னால் வெயிட்டிங்கில் இருந்தவர் அருகில் இருந்தவரிடம் எதோ சொல்லி சிரித்தார்.

அநேகமாக , டாப் ஆங்கிளில் எனது இலையில் நான்கு மலைச் சிகரங்கள் தெரிந்திருக்க வேண்டும் அவருக்கு.

சாம்பார் வாளிக்கு பின்னாலயே ரசம் வாளியும் வந்தது.

” இப்படி வந்தா ஒன்னு சேர வந்துட்றீங்க இல்லனா ஆளே காணாம போயிடுறீங்க ..

சாம்பார் சாப்பிட்டு முடிக்கிறதுக்குள்ள எப்படிப்பா ரசம் சாப்பிடறது ..?”

” சாப்பிடலாம் .. சாப்பிடலாம் .. எவனோ பின்னாடி இருந்து குரல் கொடுத்தான்.

திரும்பிப் பார்த்தேன்..

யாரென்று கண்டு பிடிக்க முடியவில்லை.

” தம்பி, புரியாத ஆளா இருக்கீங்களே .. ரசத்த இப்பவே வாங்கி வச்சுக்கோங்க ..” அனுபவஸ்தர் வலியுறுத்தினார்.

ரசத்துக்கு என குவித்து வைத்திருந்த குன்றில் ஒரு குழி வெட்டி ரசத்தை அதில் ஊற்றச் சொன்னேன்.

” வத்தக் குழம்பு இல்லையா ..?”

” வரும் சார் .. ” “ஏன் பறக்குறீங்க“ என்று கழுத்து வரை வந்து விட்ட வார்த்தையை நல்லவேளை முழுங்கிவிட்டான்.

” தம்பி உங்க ரசம் நம்ம இலைக்கு வருது பாருங்க ” அருகில் இருந்தவர் சிரித்தபடி கூறினாலும்

அது சிரிப்பதற்காகக் கூறியது அல்ல.

இதற்கு உடனடியாக ஆக்‘னில் இறங்கியாக வேண்டும்.

மோர் குன்றில் இருந்து கொத்தாக சோற்றை அள்ளி, ரசம் லீக் ஆகும் இடத்தை சுற்றி ஒரு டேம் கட்டினேன் .

அவருக்கு பரம திருப்தி.

அடுத்து திடீரென்று காபி வைத்தார்கள் .

” இன்னும் ரசத்த கூட தாண்டலயேப்பா .. அதுக்குள்ள காபி வச்சா என்ன அர்த்தம் ?”

” சீக்கிரம் முடிச்சுட்டு எந்திரிக்கனும்னு அர்த்தம் ..” மீண்டும் அதே குரல் பின்னாலிருந்து.

காபியை ஆறிப் போய் குடிப்பதும் , குப்பையில் வீசுவதும் ஒன்று.

ஆனாலும் காபியை இழக்க எனக்கு மனமில்லை.

ரசம் சாப்பிட்டுகொண்டே , நடு நடுவே காபியையும் ஒரு சிப் இழுத்துகொண்டேன்.

புது காம்பினே‘ன். நீங்களும் டிரை பண்ணுங்க மக்கா.

” இவன் இப்பத்தைக்கு முடிக்க மாட்டான் மாப்ள . வா அந்த லைனுக்கு போவோம் ..

அந்த இரண்டு பேர் இறுதியாக என்னிடம் தோற்று வெளியேறினார்கள்.

அடுத்து மோர் வந்தது. வாங்கி பிசைய ஆரம்பித்தேன்.

என் வரிசையில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக இலையை மூடி எழ ஆரம்பித்தனர்.

இறுதியாக எனக்கு மிகவும் பிடித்த வத்தக் குழம்பும் வந்தது. இப்போது அநேகமாக அனைவரும் எழுந்து விட்டனர் ,

என் அருகில் அனைவரும் புது முகங்கள்.

ஆயாம்மா பேப்பர் ரோலை சுருட்டிக் கொண்டே வந்தார். பாதி குன்றுதான் நான் முடித்திருந்தேன்.

என் அருகில் வந்ததும் , ” பரவாயில்லை முடிங்க சார் ” என்று கருணை கூர்ந்தார் .

பரீட்சை ஹாலில் கறாராக பேப்பரைப் பிடுங்கும் ஆசிரியப் பெருமக்களே , ஆயாம்மாவைப் பார்த்து படியுங்கள்.

வரிசையில் அமர்ந்திருந்த புது முகங்கள் அனைவரும் என்னைக் குரூரமாக பார்க்க ஆரம்பித்தனர்.

எனக்கு வெட்கமாய்ப் போய் விட்டது .

மீதமிருக்கும் வத்தக் குழம்புக் குன்றை பிரிய மனமில்லாமல் ,

வாழைப் பழத்தை மேல் ஜோப்பில் போட்டுக்கொண்டு , இலையை மூடிவிட்டு

ஒரு கையில் ஐஸ் கிரீம் மறு கையில் ஜாங்கிரியுடன் நான் எழ முற்பட்டபோது

” சார் .. இங்க யாருக்கோ தோச வரலயாமே .. உங்களுக்கா ? ”

என்ற குரல் உசுப்பேத்தியது.

திரும்பி அமர்ந்தால் அடி விழும் என்று தெரிந்ததால்,

” நான் இல்லப்பா ..” என்று கூறிவிட்டு கை கழுவ சென்றேன்.

” நிம்மதியா திங்ககூடவிட மாட்றானுவ.....”

படித்ததில் பிடித்தது

நன்றி தனு (முகப் புத்தகப்பக்கம்)

விதை

~ வே.சுகந்தி ~

நான் வீழ்ந்தது மண்ணல்ல
பாறையின் இடுக்கில்
சிறு மண் துகள்களின் மீதே.
வீழ்ந்த மழைத்துளியோ
என்னை விழித்தெழச் செய்துவிட்டது
தகிக்கும் வெப்பமோ
தழுவும் தென்றலோ
இனி இதனோடே
என் போராட்டம்
வேர் பிடிக்கும் வித்தையை
கற்றுக் கொள்வேன்
தூராய் வளர்ந்து
மெல்ல மெல்ல இவ்விடத்தை
ஆக்ரமித்துக் கொள்வேன்
பல்லாயிரம் உயிர்களுக்கு
நிழல்தருவேன்
கனி தருவேன்
கூடுகட்டக்
கிளை தருவேன்
வான்மழை பொழிந்து
வையகம் செழிக்க
பூமிதனை குளிரவைப்பேன்
எனை வேருடன்
வெட்ட வரும்
கோடரிகளுக்கும் காம்பாவேன்
கொஞ்சம் கருணை காட்டுங்கள்
என் மீதமர்ந்து
கொஞ்சி விளையாடும்
குஞ்சுகளை கொன்று விடாதீர்கள்!

தேசிய கலை இலக்கியப்பேரவை பல மாவட்டங்களில் தொடர்ச்சியான புத்தக அறிமுக நிகழ்வுகளை நடாத்தி வருவதோடு அந்த நிகழ்வுகளின்பேது புத்தக கண்காட்சி மற்றும் பல்வேறு வகையான கலை நிகழ்வுகளையும் நடாத்திவருகின்றது.

இந்த தொடர் நிகழ்வின் ஒரு கட்டமாக யாழ் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நூல் அறிமுக நிகழ்வும் புத்தக கண்காட்சியும் அத்தோடு மலை வேளையில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலைஞர்களால் தயாரித்து நெறியாள்கை செய்யப்பட்ட பல மேடை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன.

தேசிய கலை இலக்கியப்பேரவையின் தொடர் கலை இலக்கிய நிகழ்வு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடை பெற்ற இந்த நிகழ்வில் நாடகர் கலாநிதி ம. சண்முகலிங்கம் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு முதல் நிகழ்வாக இடம்பெற்று அஞ்சலி செலுத்தப்பட்டு அவருடைய மேடை நாடக கலைப் பயணம் சார்பான அனுபவ பகிர்வு உரையோடு நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

அதைத் தொடர்ந்து ஐந்து நூல்களின் அறிமுகமும் அந்த நூல்கள் பற்றிய அறிமுகத்துடனான ஆய்வுரைகளும் ஒவ்வொரு நூல்களுக்கும் தனித்தனியாக வெவ்வேறு ஆளுமைகளால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் சித்திரலேகா மௌனகுருவின் **பெண்நிலைச் சிந்தனைகள்** என்ற நூல் யாழினி விநோத்குமார் அவர்களாலும், மைதிலி றெஜினோல்டின் **ஓட்டிச உலகில் நானும்** என்ற நூல் மாதவி

உமாசுதசர்மா அவர்களாலும், மாயனின் **நூறு மின்னல்கள்** நூல் கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களாலும், தேன்மொழி சபாவின் **ஆத்திசூடிக் கதைகள்** எம். எ. முருகதாசன் அவர்களாலும், வி. ரி. இளங்கோவனின் **ஈழத்து இலக்கியச்சிற்பிகள்** எம். மயூரன் அவர்களாலும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டன. அறிமுக உரைகள் நிகழ்வை மிக பயனுள்ள நிகழ்வாக அமைத்தமை சிறப்பாகும்.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நாடகர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கத்திற்கு நினைவேந்தல்

நாடகர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் மறைவின் பின்னரான நினைவேந்தல் நிகழ்வொன்றினை கொழும்ப தமிழ்ச்சங்கம் 14 மாசி 2025 அன்று தமிழ்ச்சங்க மண்டபத்தில் நிகழ்த் தியது. தமிழ்ச் சங்கத்தலைவரின் தலைமையில் பல ஆளுமைகளின் பங்குபற்றுதலோடு இந்த நிகழ்வு நடந்தேறியது. **அமரர் குழந்தை ம. சண்முக லிங்கத்தின்** திருவுருவத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மாலை அணிவித்து இந்த நிகழ்வு ஆரம்பமாகியது.

முதலில் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இரா ஜகுலேந்திரா அவர்கள் உரையும் அதைத்தொடர்ந்து வெவ்வேறு வகையில் நாடக ருடன் நீண்டகாலமாக தொடர்பில் இருந்த அவருடன் நெருக்கமாகப் பழகியவர்களென கருதப்பட்ட பேராசிரியர் மௌனகுரு, முனைவர் எஸ் ஸ்ரீபிருந்திரன், திரு. பா. நந்தகுமார், மருத்துவர் திரு. சி அனுஷ்யந்தன் மற்றும் முனைவர் ச. ஜெயபிரகாஸ் ஆகிய தெரிவுசெய்யப்பட்ட சில பிரமுகர்களின் அனுபவப்பகிர்வு உரைகளும் இடம்பெற்றன. ஒவ்வொரு பிரமுகர்களும் ஒவ்வொரு வகையிலான தொடர்புபட்டவர்களாக இருந்தனர் என்பது அவர்களது அனுபவப் பகிர்வுகளின் மூலமாக கண்டுணரக்கூடியதாக இருந்தது. அவர்கள் அந்த தொடர்பினூடாக குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுடனான அனுபவங்களை பல சுவாரஸ் யமான தகவல்களோடு பகிர்ந்துகொண்டனர்.



பேராசிரியர் மௌனகுரு அவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. எப்படி தங்கள் நட்பு ஆரம்பித்தது, அது எவ்வாறு குடும்ப நட்புறவாக மாறியது, அந்த நட்பு நாடக அரங்கக்கலையுடன் எப்படி இறுதிவரை பயணித்தது என்ற கோணத்தில் தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டதோடு நாடகரின் படைப்புகளில் சிலவற்றை தெரிவுசெய்து அவை எவ்வாறு வெவ்வேறு காலகட்டங்களுடன் தொடர்புபட்டன என்பதையும் விளக்கமாக குறிப்பிட்டிருந்தார். நிகழ்வு மிகவும் பயன்மிக்கதாக நடந்தேறியது.

'இரவி' சஞ்சிகை

மென் மேலும் வளர்ச்சிபெற்று

காலகாலத்துக்கும்

சிறப்பான படைப்புகளை தாங்கி வெளிவந்து

வாசகர்களை மகிழ்விக்க வேண்டுமென

உளமார வாழ்த்துகிறோம்.......